ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

100
1-56

திருநறையூரென்னும்

நாச்சியார்கோவில்

ஸ்ரீநிவாஸக்ஷேத்ர மாஹாத்ம்யம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1956
MADRAS

மணிமுத்தாநதி

தஞ்சாவூர் ஜில்லா

[illegible]ாச்சியார்கோவில்,

[illegible] தேவஸ்தான வெளியீடு.

::

1955 விலை அணு 6.

Q22:38.2119
N55
111664

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீநிவாஸக்ஷேத்ர மாஹாத்ம்யம்

(தமிழ் மொழிபெயர்ப்பு)

பிரும்மாண்டபுராணத்தில் உத்தரகாண்டத்தில்
பிருகு - செளநக சம்வாதத்தில்
1 முதல் 12 அத்தியாயங்கள்
அடங்கியது

நாச்சியார்கோவில்
ஸ்ரீநிவாஸபெருமாள் தேவஸ்தான
வெளியீடு.

-::-

1955

பதிப்புரை

இச் சிறுநூல் தஞ்சை இந்துமத அறநிலைய பாதுகாப்பு டிப்டி கமிஷனர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க வெளியிடப் பட்டிருக்கிறது. இந்த தேவஸ்தானத்தின் முன்னாள் நிர்வாக தர்மகர்த்தரான நாச்சியார்கோவில் ஸ்ரீமான் N. K. R. நாராயணசாமி நாயுடு அவர்கள் நன் முயற்சியால் முதல் நூலான நாகர லிபியிலுள்ள பிரும்மாண்ட புராணம் உத்தர காண்டம் ஒன்றுமுதல் பனிரெண்டு அத்தியாயங்களில் அடங்கிய ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள் மாஹாத்ம்யத்தை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருந்ததை இதுபோது தமிழில் புத்தக ரூபமாகவெளியிடப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட பிரும்மாண்ட புராணம் அச்சில் இல்லாததாலும், ஏட்டுப் பிரதியாய் இருப்பதாலும் அதில் உள்ள விஷயங்கள் மறைந்து போகாமல் இருக்கும்படி இந்நூல் வெளிவந்துள்ளது.

PR. பொன்னுசாமி,
S. சங்கரதாணு பத்தர்,
டிரஸ்டிகள்.

நாச்சியார்கோவில்,
31—12—1955.

N. K. R. திருவரங்கம் நாயுடு.
மானேஜிங் டிரஸ்டி

ஸ்ரீ வஞ்சுளவல்லித் தாயார் சமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள்

பக்ஷிராஜஸ்வாமி — கல்கெருடன்

உ

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

பிரம்மாண்டபுராணத்தில் உத்தரகாண்டத்தில்

பிருகு-சௌநக சம்வாதத்தில்

ஸ்ரீநிவாச மஹாத்துமியம்

முதலாவது அத்தியாயம்.

(இதில் முதலாவது அத்தியாயத்தால், சௌநக முனியால் பிரசனம் பண்ணப்பட்ட பிருகு ரிஷியானவர் இந்த சீநிவாச மகாத்துமியத்தைச் சுருக்கமாகச் சொன்னாரென்று சொல்லப்படுகிறது.)

சௌநக ரிஷியின் கேள்வி.

வாரீர், அலர்ந்த தாமரைப்பூப்போலிருக்கிற நேத்திரங்களையுடையவராயும், ஸ்ரீமந்நாராயணனுடைய பாதாம்புசத்தின் தேனைப் பானம் பண்ணுவதில் வண்டின் குணத்தை ஒத்தவராயும், நான்கு வேதங்களுடையவும், ஆறு அங்கங்களுடையவும், தத்வங்களை நன்றாக அறிந்தவராயும், சர்வ சாத்திரங்களையும் நன்றாக அறிந்தவராயும், இந்திரன் முதலான தேவதைகளுடையவும், பிரகலாதன் முதலான வசுக்களுடையவும், கிரீடவிரத்தினகாந்தி பரம்பரைகளினாலே ஆர்த்திவழிக்கப்பட்ட பாதங்களையுடையவராயும், சர்வ மந்திரங்களினிது விதானங்களையறிந்தவராயும், சர்வதீர்த்தங்களின் மகாத்துமியத்தைச் சொல்லுவதில் சமர்த்தராயும், சர்வ க்ஷேத்திரங்களின் பிரபாவத்தைத் தெரிந்துகொண்டவராயும், சர்வத்தையும் அறிந்த, பகவானாகிய முனிபுங்கவரே அடியேன்மீது கிருபை செய்து ரக்ஷிக்கக்கடவீர்.

அநேக தீர்த்தங்களுடைய மகாத்மியத்தையும், தீர்த்தங்களுடைய விசேஷத்தையும், புண்ணியங்களாயிருக்கிற விமானங்களுடைய வெப்பத்தையும், பெரும்பான்மையாய், கங்காதி புண்ணிய நதிகளுடையவும், புண்ணியங்களான கிரிகளுடையவும் மகத்தான ஆரணங்களுடையவும், விசேஷமாக சர்வ தபோ மகிமைகளுடையவும், அனேக மந்திரங்களுடையவும் மகாத்துமியத்தையும், வேதாந்த ரகசியங்களையும் அவித்தையென்று சொல்லப்பட்ட பிரகிருதியின் குணங்களையும், முந்தியே தேவரீரிடத்தில் நின்றும் யென்னால் கேட்கப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தின் பெருமையை உள்ளபடிகேட்கவேணுமென்று ஆசையுடையவனாயிருக்கிறேன், வாரீர் மகாமுனியே, உம்முடைய வாக்காகிற அமுதத்தை எத்தனையாவர்த்தி பானம் செய்த போதிலும் யென் மனமானது திருப்தியடையவில்லை. ஆகையால் இந்த சீனிவாஸ மகத்துவத்தை அடியேன்மீது கிருபை கூர்ந்து விஸ்தாரமாய்ச்சொல்லவேணும்.

பிருகு ரிஷியின் வாக்கியம்.

வாரீர், பிராமண சிரேஷ்டராயும், தபோநிதியாயுமிருக்கிற சௌனகரே! உலகத்துக்குசிதமாயிருந்துள்ள இந்த பிரச்னத்தை நன்றாக பிரச்னஞ் செய்தீர். சர்வசித்தியைப் பண்ணிக்கொடுக்க வல்லதாயும், புண்ணியமாயும் சர்வசம்பத்தையும் மனிதர்களுக்கு கொடாநின்றும் பவித்திரங்களுக்குள்ளே பவித்திரமாயும், ரகசியங்களுக்குள் உத்தமரகசியமாயும், மந்திரங்களுக்குள் உத்தமமந்திரமாயுமிருக்கிற ஸ்ரீநிவாஸ க்ஷேத்திர மந்திரமகிமையானது. ஓய் முனிசத்தமரே! பிரும்மாதிகளான எல்லா தேவர்களாலும் வித்தாரமாகச் சொல்லுவதற்கு அநேக வருஷங்கள் முயற்சி எடுத்த போதிலும் சொல்லப்படமாட்டாது. வாசுதேவனென்று சொல்லப்பட்டவராயும், சகல ஜெகத்துக்கும் ஆதிகாரணமாயும், யெல்லாவற்றையுமறிந்தவராயும், சர்வ ஜகத்திலேயும் உள்ளும் புறமும் வியாபித்தவராயும் ஜகன்மயமான விராட்டாயும் விபுவாயுமிருக்கிற ஸ்ரீமந் நாராயணனென்ன தேவதேவனாகிய அந்த பகவானுக்கு வல்லமையாயும், திவ்யசக்தியையுடையவளாயும் அந்த பகவான் எந்த தர்மத்தை நடத்துகிறாரோ அந்த தர்மத்தையே தான்

நடத்துகிறவளாயுமிருக்கிற சாக்ஷாத் தேவ தேவியான மஹா லெட்சுமியென்ன, மகானுபாவாளாகிய இவ்விருவரும் அந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திர மந்திர ப்ரபாவத்தை முழுமையுஞ் சொல்லு வதில் சக்தியை யுடையவர்கள். வாரீர், முநிபுங்கவரே அந்த ஸ்ரீநி வாஸ மகாத்துமியத்தை அறிகைக்கு சாக்ஷாத் நாராயணன்தான் அறிகைக்கு சக்த்தர். அன்றியும் சர்வக்யராயும் சர்வலோகேசரா யும் சர்வ லோகத்துக்கும் சுகத்தை பண்ணுகிறவராயுமிருக்கிற சங்கர பகவானறிந்து சொன்னால் சொல்லலாம். அல்லது வேறு மந்தபுத்திகளுக்கெட்டாது. நானேவென்றால் எனக்கு எவ்வளவு சொல்ல சக்தியோ யென் புத்திக்கெவ்வளவு யெட்டுமோ அவ் வளவு சொல்லுகிறேன். நீர் மனதை நிலை நிறுத்திக்கொண்டு துர்லபமான அந்த க்ஷேத்திர மகாத்துமியத்தை சாவதானமாய் கேளும்.

புண்ணியங்களுடைய கூட்டம் வடிவெடுத்துக்கொண்டுநடை யாடுவது போலிருக்கிற காவேரி நதிக்குத் தென்கரையில் கிழக்கு சமுத்திரத்து மேல்பாகத்தில் மூன்று யோஜனை தூரத்தில் செண் பகம், வகுளம், புன்னை, சுரபுன்னை, தாமலமென்று சொல்லப் பட்ட பச்சிலை, கிருதமால கூந்தற்பனை, இளமையான தேக்கு, அசோகம், யெலுமிச்சை, பலா, நீர் நொச்சில், பஞ்சாடி, நெல்லி, தேமா, கட்டுமா, ஒட்டுமா, வண்டுமா, குருந்து, மருதாணி, கடம்பு, விலுவம், பாதிரி, தென்னை, வாழை, மலைவாழை, பிடி வாழை, கொட்டை வாழை, தேன் வாழை, செவ்வாழை மொந் தன்வாழை, ரஸ்தாளி, பூவன், கமுகு, தாழை இது முதலான விருட்சங்களாலும், வேர்முதல் நுனிவரையில் தளிர்த்து திவ்விய பூங்கொத்துகளை தரியாநின்றுமிருக்கிற கற்பகத்தருவுக்குச்சமான மான வேறு சில விருட்சங்களாலும் மல்லிகை முல்லை கிரி மல்லிகை கொடமல்லிகை நாட்டு மல்லிகை ஜாதி முதலாகிய புட் பங்களாலும் உத்தமமான பல வகைகளாலும் தேன்களைக்குடித்து விட்டு கூட்டங் கூட்டமாய் ரீங்காரம் பண்ணும் வண்டுகளாலும் மநோகரமாய் மதுகந்தங்களோடே கூடியதாயும் அதிபுண்ணிய மாய் பாபங்களைப் போக்குவதாய் அதிக வியப்பைத்தருவதான சுகந்தவனமென்று ஓர் வனமிருக்கிறது. அந்த வனத்தின் நடுவில் மகா புண்ணியமான ஸ்ரீநிவாஸம் யென்கிற க்ஷேத்திரமிருக்கிறது.

யாதாமொரு ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தை மனதில் யெண்ணின மாத்திரத்தில் மனுஷ்யன் மிருத்துவை அடையமாட்டானோ அந்த இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தை சித்தி க்ஷேத்திரமாக அறியும் இந்த க்ஷேத்திரத்தில் தாரமென்றும் அவதாரமென்றும் தாராநு தாரமென்றும் சொல்லப்படுகிற மந்திரங்களை ஜபித்தால் விசேஷமாய் சித்தி யுண்டாகிறது. இதுவு மன்றியில் ஓர் முநிசத்தமரே திருவட்டாக்கரத்தினுடையவும் துவதசாக்கரமென்கிற ஸ்ரீவாஸு தேவ மந்திரத்தினுடையவும் சித்தி விசேஷமா யுண்டாகிறது. இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தின் நடுவில் சுகந்தபுரி யென்கிற நாமதேயத்தையுடைய நகரமொன்றிருக்கிறது. அதில் ஸ்ரீ மகாலெக்ஷிமி நித்திய சந்நிதி பண்ணிக்கொண்டு பக்தாளுக்கு தர்சனங் கொடுத்துக்கொண்டு இருக்கிறாள். அந்த சுகந்த நகரத்தில் தீர்த்தங்களுக்கெல்லாமுத்தம தீர்த்தமாயும் மகாபரிசுத்தமுடையதாயும் மூன்று லோகத்திலும் பிரசித்திபெற்றதாயுமிருக்கிற மணிமுத்தாநதியென்று பிரசித்தமான ஓர் தீர்த்தமிருக்கிறது. யாதொரு மணிமுத்தாநதீ தீர்த்தத்தை யெந்த மானவன் மனதினால் சுமரிக்கிறானோ அவன் உடனே பிர்மஹத்தி முதலான பாபங்களில் நின்றும் விடுபட்டு சுத்தமான மானசத்தையுடையவனாகி விடுகிறான். இதில் யாதொரு சந்தேகமுமில்லை. அந்த நதியின் தென்கரையில் மூன்று லோகத்திலும் பிரசித்தியடைந்த உத்தமமான ஸ்ரீநிவாஸமென்று பெயரையுடைய திவ்விய விமானமொன்றிருக்கிறது. விமான சிரேஷ்டமாகிய அந்த ஸ்ரீநிவாஸ விமானத்தில் பராவரேசராய், ஜகன்மயராய், சர்வேசனாய் பரமாத்துமாவாய் பிரபுவாயிருக்கிற சாக்ஷாத்து ஸ்ரீமந்நாராயணனானவர் வாசுதேவனென்றும் சங்கருஷணரென்றும் பிரத்தும்மனனென்றும் அநிருத்தனென்றும் சாம்பனென்றும் அந்தாகாரமாய் மானுஷரூபதாரியாய் பரவரேசையாய் பராசக்தியாய் பரமானந்த ரூபையாய் ஒரு க்ஷண காலமும் விட்டுப்பிரியாதவளாயிருக்கிற மகாலட்சுமிதேவியோடு உலகத்துக்கு ஹிதத்தைப்பண்ணவேணுமென்கிற இச்சையால் பக்தாளுக்கு மனோபீஷ்டத்தைக்கொண்டு சாவித்திரி சரசுவதியென்கிற மஹிஷிகளோடு கமலபவனான பிருமாவினால் நித்தியமாய் ஆராதிக்கப்பட்டு இன்னமும் வசித்துக்கொண்டிருக்கிறார். வாரீர், தபோநிதியே, இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தை சுவயம் வியக்த்தஸ்தலமென்று அறியும்.

ஓய் துவிஜோத்தமரே, ஸ்ரீரங்கம், விஷ்ணுசயநமென்று சொல்லப்பட்ட திருப்பாற்கடல், ஸ்ரீமுட்டம், வெங்கிடாஜலம், சாளக்கிராமம் யென்கிற ஓர் மலை, தோத்தாத்திரி யென்னும் வாநமாமலை புஷ்கரம், வதரிகாச்சிரமம், நைமிசாரணியம், சியாநந்தூரமென்கிற வடரெங்கம் ஸ்ரீநிவாஸம், துவாரகை இந்த பனிரெண்டு தலமும் சுவயம் வியமவியக்தம் யென்று சொல்லுகிறார்கள். இதுகளுக்குள் இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தை பிரம்மா முதலாகிய தேவர்களும் பிரம்மவாதிகளான மகாமுநிகளும் மகத்தான ஸ்தலமென்று சொல்லுகிறார்கள். ஓய் முநிபுங்கவரே இந்த க்ஷேத்திரத்தை கிருத யுகத்தில் மூன்று யோஜனை தூரமுள்ளதென்றும் திரேதாயுகத்தில் இரண்டு யோஜனை தூரமுள்ளதென்றும் துவாபரயுகத்தில் ஒரு யோஜனை தூரமுள்ளதென்றும் இந்தக்கலியுகத்தில் சுற்றிலும் அரை யோஜனை தூரமுள்ளதென்றும் அறிந்துகொள்ளும். பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திராளென்கிற நான்கு ஜாதிகளென்ன கிரிமி சீடமென்ன, ஈ யெறும்பு முதலாகிய வேறு யாதொரு ஜெந்துக்களென்ன இந்த யோநிகளுக்குள்ளே யாரார் இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் வசிக்கின்றார்களோ அவர்கள் சுத்தாத்துமாக்களாகி உத்தமகதியை அடைகிறார்கள்.

ஓய் துஜரே, இந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தை சேவிக்க வேணுமென்று இச்சையுடைய யாதொரு நரனானவன் பரமமான பக்தியோடே கூடினவனாய் தன்னுடைய கிரகத்தில் நின்றும் வெளிப்புறப்பட்டு பூமியில் எவ்வளவு அடி நடந்து வருகிறானோ அவ்வளவாயிரம் வருஷம் மனோகரமான சாகத்தீவில் மஹாராஜாவாய் ஜனித்து ஸ்ரீமானாகிக்கொண்டு தனக்கிஷ்டமான போகங்களெல்லாமனுபவித்து அந்திமதசையில் பரபிர்மத்தின் சாரூப்பியத்தை அடைகிறான். தங்களுடைய பதவிக்கு நாசம் வருமோ யென்று சங்கையை அடைந்த யக்ஷ கிந்நர கிம்புருஷ சாத்தியானென்கிற தேவர்கள் அப்சரஸ்திரீகளோடுங்கூட இந்த பூமியின்கண் மகாபுண்ணியமாயும் முக்தியை அளிப்பதாயும் சுபமாயுமிருக்கிற ஹரிக்ஷேத்திரமாகிய இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் திரியக்குக்களின் யோநியிலாவது தாவர யோநிகளிலாவது மாநிட யோநிகளிலாவது பிறக்கவேணுமென்று சதா கானம் பண்ணுகிறார்கள். இதுவுமன்னியில் சாக்ஷாத் யமதர்ம ராஜனானவன்

குரூரானாயும் குரூரமான ஆகாரங்களையுடையவர்களாயும் சூலம் பாசம் முதலான ஆயுதங்களுடன் கூடினவர்களாயுமிருக்கிற தன்னுடைய கிங்கரரை அழைத்து இந்த சுகந்தவனத்துக்கு வெளியில் மூன்றுயோஜனை தூரம் வரையில் மறந்தும் போகாதீர்கோள் போகாதீர்கோள் யென்று அடிக்கடி சொல்லி வருகிறான். இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் யாதொரு மனுஷ்யனானவன் பக்தியினால் பிராம்மணரை போஜனம் பண்ணிவைக்கிறானோ அந்த அன்னம் யெவ்வளவு யெண்ணிக்கையோடே கூடியிருக்கிறதோ அவ்வளவாயிர வருஷம் அந்த மனுஷ்யன் பிர்ம்ம லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். யாதொரு மனுஷ்யன் ஓஷதீசனான சந்திரன் அமாவாசையில் ஓஷதிகளில் தங்கி கும்பராசியை அடைந்த சூரியனோடு சேரும்போது மணிமுத்தாநதி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மனதை அன்னிய விஷயத்திற் செலுத்தாமல் இந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் தன்னுடைய பிதுருக்களை குறித்து விதி பிசகாமல் சிரார்த்தம் செய்வானேயாகில் அந்த பிதுருக்கள் அந்த சிரார்த்தத்தால் ஒரு மனு வந்தரம் வரையில் திருப்தியடைந்து விடுகிறார்கள். யாதொருவன் மகாபாதகத்தை பண்ணினவனோ ஒருவன் செய்த உபகாரங்களை மறந்துவிடுகிறானோ எவன் அதிக பாதகனோ எவன் உபபாதகத்தோடு கூடினவனோ எவன் பிர்ம்ம ஹத்தி முதலாகிய சர்வ பாபத்தைப்பண்ணினவனோ யாதொருவன் நாஸ்திகனோ அவனெல்லாம் இந்த க்ஷேத்திர கீர்த்தனத்தாலும் சிரவணத்தாலும் தியானத்தாலும் உடனே சுத்தியடைந்துவிடுகிறான். இதில் சந்தேகமேயில்லை. ஆயிரம் அசுவமேதயாகத்துக்கும் பதினாயிரம் வாஜபேய யாகத்துக்கும் கபிலையென்கிற பதினாயிரம் பசுவின் தானத்துக்கும் யாதொரு பலன் உண்டாகிறதோ அந்த பலன் இந்த க்ஷேத்திர கீர்த்தனத்தால் கிடைத்துவிடுகிறது. யாதொருவன் இந்த க்ஷேத்திரத்தில் வசிப்பவனாயும் சுரோத்திரியனாயும் குடும்பியாயும் தரித்திரனாயுமிருக்கிற பிராமணனுக்கு நல்ல பயிர் விருத்தியாகத்தக்க பூமியை அந்த பூமியின் கிரயத்திரவியமெவ்வளவோ அவ்வளவு திரவியத்தோடு தானஞ்செய்கிறானோ அந்த மகா புருஷன் அந்த க்ஷேத்திரத்தில் யெவ்வளவு தானியம் வளர்கிறதோ அவ்வளவாயிரம் வருஷம் சாகத்தீவில் ராஜாவாய்ப்பிறந்து தன்னிஷ்டப் பிரகாரம் அநேக ராஜ போகங்களை புஜித்து அந்தத்தில் யோகிகள் வம்சத்தில்

பிறந்து வேத வேதாங்கத்துவங்களை யறிந்து விசேஷமாய் புத்தி நிச்சயத்தோடு கூடினவனாய் பரமாத்துமாவான வாசுதேவனிடத்தில் தன்மனதை யர்ப்பணஞ்செய்து பரமாத்துமாவோடு சாயுச்சியத்தை அடைந்து விடுகிறான்.

வாரீர் சௌனகரே மூன்று லோகங்களிலேயும் துர்லபமான இந்த ஸ்ரீநிவாஸ மஹாத்துமியத்தையும் ரகசியத்தையும் உமக்குச் சொல்லிவிட்டேன். இந்த உத்தமமான மஹாத்துமியத்தை யாதொருவன் உதயத்தில் யெழுந்திருந்து படிக்கிறானோ அந்த புண்ணியவான் இந்த லோகசுகத்தையடைந்து பரலோக சுகத்தையுமடைந்து முத்தி சாம்ராஜ்ஜியத்தையுமடைகிறான். ஏகாதசியிலும் அப்படியே அஷ்டமியிலும் துவாதசியிலும் சிரவண நக்ஷத்திரத்திலேயும் பூர்ணிமையிலும் அமாவாசையிலும் சந்திர சூரிய கிரஹணங்களிலும் அயநத்திலும் விஷுபுண்ணிய காலங்களிலும் வியதீபாதத்திலும் சங்கரம காலங்களிலும் இந்த ஸ்ரீநிவாஸ மகாத்துமியத்தை யாதொரு புண்ணிய புருஷன் தேவதேவனான ஸ்ரீநிவாஸன் சந்நதியில் கேட்கிறானோ கேட்கும்படி செய்கிறானோ அந்த மகாபுருஷன் சகல சம்பத்தையும் சகலமான ஜயத்தையும் ஆயுளையும் கீர்த்தியையும் புத்திர பௌத்திர சமிர்த்தியும் சௌபாக்கியத்தையும் தேககாந்தியையும் சர்வ மனோபீஷ்டத்தையும் அடைந்து முடிவில் விஷ்ணுபதமான பரமபதத்தையுமடைகிறான்.

ஸ்ரீமத் பிர்ம்மாண்டபுராணத்தில் உத்திர கண்டத்தில் பிருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாஸ மகாத்துமியத்தில் முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(2-வது அத்தியாயத்தால் பகவானால் செய்யப்பட்ட வியஷ்டி சமஷ்டி யென்கிற ஜகத்தின் சிருஷ்டிக் கிரமஞ் சொல்லப்படுகிறது.)

சௌநகர் கேள்வி.

வாரீர் சர்வ லோகத்துக்கும் நாதராய் சர்வ லோக பிதாமகராயிருக்கிற பிருகுரிஷியே உம்முடையகிருபையினாலே அடியேன்

கிருதார்த்தனுக ஆகிவிட்டேன். அடியேன்மீது கிருபை செய்தருளவேணும். பரஞ்ஜோதியாய் ஜகன்மயராய் மூன்று லோகங்களுக்கு மாதாராய் ஸ்ரீமானுயிருக்கிற அந்த வாசுதேவனுனவர் எந்த காலத்தில் எந்த காரணத்தால் தான் ஐந்து ரூபங்கொண்டு மானிடரூபந்தரித்து தேவதேவியான மகாலெட்சுமியோடு ஆவிர்ப்பவம் செய்தார். பத்மசம்பவரான பிர்ம்மாவினுல் எதற்காக உபாசிக்கப்பட்டார். அந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் எந்த ரிஷியினுல் நடத்துகைக்கு அருமையான தவம் செய்யப்பட்டது. வாரீர் மகாபாக்யசாலியே முத்தியைக் கொடுப்பதாயும் சுபமாயுமிருக்கிற அந்த க்ஷேத்திரத்தில் ஆராலே என்ன பலன் அடையப்பட்டது. ஆராலே எந்த சித்தி அடையப்பட்டது. வாரீர் மகாமுனியே நீர் யாதொரு காரணத்தால் இறந்தகாலம் வருங்காலம் நிகழ்காலமென்கிற மூன்று காலத்தையுமுணர்ந்து சொல்ல வல்லமையுடையவரோ ஆகையால் அடியேன் கேட்ட கேள்வியெல்லாம் கிருபை செய்து செவ்வையாக வித்தாரமாகச் சொல்லவேணும்.

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் முநிசத்தமரே நீர் கேட்ட கேள்வியை வித்தாரமாகச் சொல்லுகைக்கு பிரம்மாதிகளாயிருக்கிற தேவர்களுக்குள் ஆர்தான் சொல்லவல்லவர்கள். ஜகன்மயராயிருக்கிற அந்த வாசுதேவனெருவரே சொல்லவல்லவர், ஆகையால் எனது புத்திக்கெட்டினவரையில் கொஞ்சஞ் சொல்லுகிறேன். சாவதானத்தோடு கூடி கேளும். ஆதிகாலத்தில் பிர்ம்மாவுமில்லை, சம்புவுமில்லை, இந்திரனுமில்லை, பிரஜாபதியுமில்லை, ஆகாசமில்லை, சந்திர சூரியாளுமில்லை, இருபத்தேழு நட்சத்திரங்களுமில்லை, சாமானிய நட்சத்திரங்களுமில்லை. வாரீர் முனிச்சிரேஷ்டரே ஜகத்குருவாயிருக்கிற அந்த பகவானெருவரே தனக்குத்தான்றுனே ரமித்துக்கொண்டிருந்தார். அந்த வாசுதேவனுக்கு மனதில் இந்த ஜெகத்தை சிருஷ்டிக்கவேணுமென்று ஒராசையுண்டாயிற்று. இப்படி சங்கற்பஞ்செய்த அந்த பரமேட்டியாகிய பிர்ம்மத்தினுடைய சுவரூபத்தில் நின்றும் இரண்டு பிர்ம்மமுண்டாயிற்று. அதில் ஒன்று பிரதானமென்கிற பிரகிருதி. மற்றென்று அந்த மகேசுவர சுரூபியாகிய புருஷன். அந்த பகவானுனவர் தனக்குத்தான்றுனே ரமித்துக்

கொண்டு அநந்தத்தையடைந்து கொண்டிருக்கிறவராக இருந்த போதிலும் க்ஷரமென்றும் அக்ஷரமென்றுஞ் சொல்லப்படுகிற அந்த பிரகிருதி புருஷாளிருவரையும் தானனுப்பிரவேசஞ்செய்து அதில் நின்று முக்குணத்துக்கு ஹேதுவாகிய பிரதான தத்துவ முண்டாயிற்று. அந்த பிரதான தத்துவத்தில் நின்றும் மகத் தத்துவமுண்டாயிற்று. அந்த மகத்தத்துவத்தில் நின்றும் அகங் கார தத்துவத்தில் நின்றும் சத்துவகுணமென்றும், ரசோகுண மென்றும் தமோகுணமென்றும் மூன்று குணங்களுண்டாயிற்று. அந்த அகங்கார தத்துவமானது பௌதிகாஹங்காரமென்றும் தைஜசாஹங்காரமென்றும் வைகாரிகாஹங்காரமென்றும் மூன்று விதம். அந்த முக்குணத்தில் நின்றும் சர்வ பூதங்களுக்கும் ஆதி காரணமான சப்த தன்மாத்திரையுண்டாயிற்று. விகாரத்தை யடைந்த அந்த சப்த தன்மாத்திரையில் நின்றும் ஸ்பரிச தன் மாத்திரையுண்டாயிற்று. ஓய் மஹா முநியே விகாரத்தையடைந்த அந்தஸ்பர்ச தன்மாத்திரையில் நின்றும் வாயு உண்டாயிற்று. ஸ்பர்ச லக்ஷணத்தோடுகூடி விசிரித்த அந்த வாயுவினிடத்தில் நின்றும் ரூப தன்மாத்திரை யுண்டாயிற்று. அந்த ரூப தன் மாத்திரையில் நின்றும் ரூபத்தை குணமாக உடைய தேயு உண் டாயிற்று. விகாரத்தையடைந்த அந்த தேயுவில் நின்றும் ரசதன் மாத்திரை யுண்டாயிற்று. அந்த ரசதன்மாத்திரையில் நின்றும் ரசத்தை குணமாக உடைய அப்பு உண்டாயிற்று. விகாரத்தை அடைந்த அந்த அப்புவில் நின்றும் கந்த தன்மாத்திரை யுண்டா யிற்று. வாரீர் முநிபுங்கவரே அந்த கந்த தன்மாத்திரையில் நின் றும் கந்தத்தை குணமாக உடைய பிருதிவி யுண்டாயிற்று. வாரீர் முநிபுங்கவரே அந்த அகங்காரத்தில் நின்றும் பூதங்களுடைய சிருஷ்டி உண்டானதாகச் சொல்லப்பட்டது. தமோ ரூபமான ஞாங்காரிகாஹங்காரத்தில் நின்றும் இந்திரியங்கள் மனது இதுக ளுண்டாச்சுதுகள். சிலர் தைஜசாஹங்காரத்தில் நின்று உண்டான தாகச்சொல்லுகிறார்கள். சுரோத்திரம் துவக்கு சக்ஷு நாக்கு வகிராணம் யென்கிற சப்தாதிகளை கிரகிக்குங் குணங்களையுடைய இந்த ஞாநேந்திரியங்களைந்தும் வாக்கு, பாணி, பாத, பாயு, உபஸ் தம் யென்கிற கர்மேந்திரியங்களாகிய இவ்வைந்திந்திரியங்களும் பூதாதிகளாகிய ஐந்தும் இதுகள் ஒன்றோடொன்று சேர்ந்தது களாகாமல் சிருஷ்டியில் சாமர்த்தியத்தை யுடையதுகளாக ஆக

வில்லை. ஆகையால் பரமபுருஷனானவர் இதுகளை ஒன்றுசேர்ந்தது
களாகச்செய்து அதில் தான் கலந்து பிரவேசித்து அதுகளெல்
லாம் ஓரண்டமாகி ஜலத்தை ஆதியாக உடைய பத்து குணங்
களாலே சூழப்பட்டு அந்த அண்டமானது பிரளயாப்தி ஜலத்தில்
மெதந்து கொண்டிருந்தது. சகல ஜகத்துக்கும் காரணரான
பிர்ம்ம ரூபியாய் அகில ஜகத்துக்கும் ஆதாரமாயுமிருக்கிற அந்த
பிர்மமானது அவ்வண்டத்தில் நின்றும் காலாயிரந் தலையாயிரந்
தரித்து பெருத்த விசுவரூபத்தையெடுத்து தான்தானே ஜகத்தின்
சிருஷ்டியில் முயற்சியெடுத்த அந்த விசுவருப பகவான் முகத்தில்
நின்றும் ருக்குக்கள் அக்கினி சுக்கிரன் திருவிர்த்தான சாமம்
அக்னிஷ்டோமமென்கிற பாகம் காயத்திரி பிர்மணாள், அயன்
சுவர்க்கம் வாரீர் வித்துவானான மகாமுனியே மற்றுமுள்ள தேவ
கணங்கள் சத்துவகுணம் நிறைந்த பிரஜைகள் இதுகளந்த மகாத்
மாவினிடத்தில் நின்றுமுண்டாயிற்றுகள். இன்னமும் யஜூர்
வேதம் சந்தசு திருஷ்டுபு பிரஹத்சாமம் ஹவிசு மேதைகளுடன்
கூடிய அந்தரிக்ஷம் முதலான பதினைந்து தோமம் இதுகளுண்டா
யிற்று. அந்த பிர்ம்மத்தின் கைகளில் நின்றும் க்ஷத்திரியாளும்
ரஜோகுணத்தோடுகூடிய பிரஜைகளும் சாமவேதங்கள் ஜதிசந்தசு
ஸ்வரூபம் அதிராத்தரம் பதினேழு தோமங்கள் இதுகளுண்டா
யிற்று. வாரீர் மகாமுனியே அந்த பிர்ம்மத்தின் தொடைகளில்
நின்றும் வைசியாளும் தமோகுணத்தோடும் ரஜோகுணத்தோடும்
கூடிய வேறு சில பிரஜைகளும் மற்றும் சில பிராணிகளுமுண்டா
யிற்று. அந்த மகாபிரபுவினுடைய பாதங்களில் நின்றும் வேதங்
களுக்குள் அதர்வண வேதங்கள் அனுவிடுபு சந்தசு முதலானது
கள் அப்தோர்யாமம் தத்திரீ தமோகுணத்தோடு கூடிய வேறே
பிராணிகள் இதுகளெல்லாம் உண்டாயிற்று. ஓய் பிராமணனே
அந்த பிர்ம்மத்தின் புட்டத்தில் நின்றும் சகலமான அசுரர்களு
முண்டானார்கள். மனதில் நின்றும் சந்திரனுண்டானான். நேத்தி
ரத்தில் நின்றும் சூரியனுண்டானான். காதில் நின்றும் திக்குக்கள்
உண்டாயிற்றுகள். கால்களில் நின்றும் யக்ஷாள் ராக்ஷசாளுண்
டானார்கள். அந்த மகாபிரபுவின் ரோமங்களில் நின்றும் ஒஷதி
களுண்டாயிற்றுக்கள். அந்த பிர்ம்மத்தின் சரீரத்தில் நின்றும்
ராத்திரி பகல் இரண்டு சந்திகள் உண்டாயிற்று. அந்த மகாத்து
மாவான விஷ்ணுவானவர் தான் சிருஷ்டிசத்தியோடே கூடின

வராய்க்கொண்டு வாரீர் பிர்ம்மிஷ்டரே நானாலோகங்களோடு கூடினதாயும் நானாசமுத்திரங்களோடு கூடினதாயும் நானாதீவு களோடு கூடினதாயும் நானாவிதமான பூதங்களோடு கூடினதாயுமி ருக்கிற சராசரத்தோடுகூடிய இந்த ஜகத்தை இந்தப்பிரகாரம் சிருஷ்டித்தார்.

பிரம்மாண்ட புராணத்தில் உத்தரகாண்டத்தில் பிருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாச மாகாத்மியத்தில் சிருஷ்டிக் கிரம நிரூபணமென்கிற இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(மூன்றுவது அத்யாயத்தால் அந்த பகவான் ஜகத்தை சிருஷ்டி செய்துவிட்டு திருப்பாற்கடலில் சயனித்துக்கொண்டாரென்று சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

ஓய் துவஜோத்தமரே! வாசுதேவனென்றும் பரபிர்ம்ம மென்றும் பரமாத்துமாவென்றுஞ் சொல்லப்படுகிற அந்த ஹரி யானவர் தானே இந்தப்பிரகாரம் சமஷ்டி வியஷ்டி ரூபிணியா யிருக்கிற இந்த ஜகத்து சிருஷ்டியை செய்துவிட்டு முப்பத்திரண்டு லெட்சம் யோஜனையுள்ளதாயும் ஸ்படிகம்போலே நிர்மலமாயும் அதி மநோகரமாயும் சுழிகளின் பள்ளங்களிற் சுழண்டு வருகிற முதலை ஆமை மீன்கள் இதுகளின் கூட்டத்தையுடையதாயும் வெள்ளிமலைகளோவென்று சந்தேகிக்கத்தக்கதுகளாயிருக்கிற பருத்து நுரைக்கூட்டத்தோடு கூடியிருந்துள்ள உயர்ந்து திக்கு களை மறைத்துக்கொண்டு வருகிற அலைகளோடும் நானாவிதமான ரத்நங்களோடேயும் கூடிக்கொண்டுமிருக்கிற சர்வதேகிகளுக்கும் சுகத்தைக்கொடுப்பதாயும் பவழக்கொடிகளோடு கூடியும் முத்துக் களின் சமுகங்களாலே நிறைந்தும் பிரம்மாண்டமண்டலம்போலே அதிகுரூரமான அற்புதமென்கிற சங்கைகளோடேகூடிய நீர்க் குமிழிகளாலே படர்ந்தும் அசேஷ லோகங்களுடைய பாதங்களை யெல்லாமலம்பிவிட யோக்கியமுள்ளதாயுமிருக்கிற திருப்பாற் கடலிலே (வாரீர் மகாபாக்கியசாலியான முநிச்சிரேஷ்டரே)

யாதொரு திருப்பாற்கடலின் சிரவணத்தினாலுங் கீர்த்தனத்தினாலும் தர்சனத்தாலும் ஸபர்சத்தாலும் தியானத்தாலும் மானிடர்களுக்கு மறு ஜன்மமுண்டாகிறதில்லையோ அந்தப்பாற்கடலின் நடுவில் நான்கு பார்சுவத்திலும் சுகத்தைக்கொடுப்பதாயும் சுத்தமாயும் கற்பத்தருக்களாலே நெருங்கியும் அப்சரகணங்களோடு கூடியும் சர்வ காம பலன்களை கொடுப்பதாயும் சர்வ பாபங்களையும் அறுப்பதாயும் கந்தருவதேவதைகளின் கூட்டத்தால் சேவிக்கப்பட்டும் சமாதிகுணங்களோடுகூடியும் பக்தியோகங்களோடு கூடிக்கொண்டுமிருக்கிற சித்தசங்கங்களாலேயும் மோக்ஷத்திலிச்சையுடைய ரிஷிகளாலும் சேவிக்கப்பட்டிருப்பதாயும் மிகவும் சாந்தமாயும் சாந்த குணத்தை உண்டுபண்ணுவதாயும் எப்போதும் சித்தத்துக்குப் பிரசாதத்தைத் தருவதாயும் சம்சாரமாகிற வனத்துக்குக்காட்டுத் தீயாயும் ஆத்தியாத்துமீக ஆதிதைவிக ஆதி பௌதிகமென்கிற தாபதிரயத்தையும் போக்கவல்லதாயும் மனோஹரமாயும் விளங்காநின்றுமிருக்கிற மணற்குன்றின்நடுவிலே அந்த ஹரிக்கு பத்துலட்ச யோஜனையுயரமுள்ளதாயும் சுவர்ணமயமாயும் தேவார்கமாயும் ஐந்துலக்ஷம் யோஜனை அகலமுள்ளதாயும் லக்ஷ யோஜனை உயரமுள்ளதாயும் தங்கமயமான உயர்ந்த சிகரங்களோடு கூடி ஆயிரங்கோபுரங்களாலே ஆலத்திவழிக்கப்பட்ட திக்குகளின் மத்தியங்களையுடையதாயும் இரத்நமயமான ஆயிரந்தம்பங்களாலே நிறைந்தும் சுற்றிலும் பதினாயிரம் மண்டபங்களோடு கூடியதாயும் முத்து மாலைகளாலே நான்கு பார்சுவத்திலும் விளங்காநின்றும் சுவர்ண மாலைகளாலே அலங்கரிக்கப்பட்டும் கிண்கிணி யென்கிற சிறு சதங்கைகளின் ஜாலங்களோடு கூடிக்கொண்டும் சுவர்ண கெண்டை யென்கிற மணிகளாலே விளங்காநின்றும் அநேகமாயிரந்தோரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் நாற்புறத்திலேயும் குளிர்ந்த திவ்யாம்புத்திவலைகளாலே நனைக்கப்பட்டும் புஷ்பமாரிகளாலே நிறைந்தும் திவ்யதூபங்களாலே வாசனை செய்யப்பட்டும் அனேகமாயிரம் மேற்கட்டுகளாலே விளங்கா நின்றும் அநேகமாயிரம்பதாகத்துவஜங்களாலேயும் அநேகமாயிரங் கமுகு முதலான பாளைகளாலேயும் அநேகமாயிரங் கற்பூர தீபங்களாலேயும் மணிமயமான தீபசதங்களாலேயும் அமிருத ஜலங்களாலே நிறைக்கப்பட்டுமுள்ள சுவர்ணமயமான கும்பங்களாலும் சர்வ திக்குக்களிலும் ஓய் சௌநகரே சங்கு திரிச்சின்னம் வேணு கோமுகம் மத்

தளம் பேரி கிருகட்டி தப்பளே வாத்தியம் கனகதப்பட்டை வீர டவண்டை நிஸ்ஸாணம் ஜர் ஜரம் பணவம் இது முதலாகிய மஹா சப்தங்களோடுகூடிய வாத்தியங்களாலும் (வாரீர் பிரும்மிஷ்டரே) நான்கு புறத்திலும் ஆனந்தத்தை உண்டுபண்ணுகிற சாமகானங் களாலேயும் அநேகமாயிரம் நர்த்தனஞ்செய்கிற திவ்யாப்ஸரஸ் ஸுக்களாலேயும் கானத்தில் சிறந்த கானஞ்செய்யுங் கந்தர்வர் அநேகமாயிரங் கின்னரர்களாலேயும் தும்புரு நாரதரென்கிற தேவலோக நட்டுவர்களாலேயும் அலங்கிருதமாயும் இருக்கிற திவ்ய விமானத்தின்கண் ரத்தினங்களாலே வியப்பை யடைந்தும் சந்திர கிரணங்களாலே குளிர்ந்தும் அதுபோலே வெளுத்து மிருக்கிற வெண்பட்டுக்களினால் விரிக்கப்பட்டும் திவ்ய கெந்தங் களாலும் திவ்ய மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற திவ்ய பர்யங்கத்தில் மென்மை நாற்றம் குளிர்ச்சி யென்கிற முக்குணங் களோடேகூடியும் ஆயிரம் பணங்களோடேகூடியும் மூனு லக்ஷம் யோஜனே நீளமுள்ளவாகியும் ஒன்றரை லக்ஷம் யோஜனே அகல முள்ளவாகியும் ஒரே காலத்தில் அநேகங்கோடி சந்திரன் உதித் தாப்போல் பிரகாசமுள்ளவாகியும் சப்தபிருப்ம மயமென்கிற வியாகரணமயராயுங் நித்தியராயும் ஸநாதன சாந்த ரூபராயுமிருக் கிற ஆதிசேஷனுகிற திவ்யபர்யங்கத்தில் சர்வலோக பிதாமஹராய் பராவரபதியாய் எங்கும் வியாபித்தவராய் அப்போதலர்ந்த செந் தாமரை புஷ்பத்தின் உள்ளிதழ்ப்போலே அலர்ந்து செவ்வரி யோடி கருணாரஸத்தைப் பொழிந்து நீண்டவப் பெரியவாய கண் களையுடையவராயும் தனக்குத்தகுதியான இரண்டரை லக்ஷம் யோஜனேயுள்ள ரூபத்தை தரித்தவராயும் பரமாத்மாவாயும் பராபர ராயும் பரஞ்சோதிஸ்ஸாயும் பராத்பரராயும் பிரபுவாயும் அஞ்சன மலைக்கு சமானராயும் அளவிலியான பராக்கிரமத்தையுடையவரா யும் கோடி சூரியனுக்கு சமானமான ரத்நகிரீடத்தால் விளங்கின வராயும் மநோகரமாயும் கறுத்தும் வாசனையோடு கூடினதாயும் வெழுமூனுயுமிருக்கிற முந்நெத்திமயிரையுடையவராயும் எட்டாம் புரையின் ஆகாரத்தையொற்ற நெற்றிக்கட்டால் விளங்கினவராயும் கருணைக்கடல்மயமாய் தளதளவென்று விஸ்தாரமாயிருக்கிற கண்களையுடையவராயும் சௌந்தரியசாரத்தின் சர்வசொத்தா யிருக்கிற புன்முருவலோடு கூடியிருக்கிற முகாம்புஜத்தையுடைய வராயும் பாஞ்சஜன்யமென்கிற சங்கத்தோடுகூடிய கையோடே

போருபுரியானின்ற கண்டநாளத்தோடே கூடியவராயும் மஹா லட்சுமிக்கி விலாசமந்திரமாயிருக்கிற திருமார்பையுடையவராயும் திவ்யபீதாம்பரத்தை தரித்தவராயும் ஜகத்பதியாயும் காருண்ய ரூபையாயிருக்கிற ஸ்ரீதேவி பூதேவியாலேயும் மற்றுமுள்ள நீளா தேவி முதலான தேவிகளாலேயும் சேவிக்கப்பட்ட சரணநளினங் களையுடையவராயும் கருடனாலும் புத்திமானான சேநாதீசராலேயும் சேவிக்கப்பட்டவராயும் சங்கம் சக்கிரம் கதை கடகம் சார்ங்கம் முதலான ஆயுத மூர்த்திகளாலேயும் ஒரு வியாஜமன்னியில் இருக் கிற லக்ஷணத்தோடுகூடிய ஸநக ஸநந்தராகிய மகாயோகிகளாலே தோத்திரம் பண்ணப்பட்டவராயும் திவ்யபூஷணங்களாலே பூஷித ராயுமிருக்கிற ஸ்ரீமந் நாராயண பகவான் யோக நித்திரையை பண்ணினார்.

ஷை ஸ்ரீ பிரும்மாண்ட புராணத்தில் உத்திரகாண்டத்தில் பிருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாஸ மகாத்மியத்தில் திருப் பாற்கடல் வர்ணனமென்னும் மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இந்த நான்காவது அத்தியாயத்தால் திருப்பாற்கடலில் யோக நித்திரை செய்யும் மகாவிஷ்ணுவை தன்னைவிட்டுத் தூங்குகிரு ரென்று கோபங்கொண்ட மகாலெட்சுமியானவள் இந்த சுகந்த வனத்தில் லெட்சுமி புத்திரியாகவும் விஷ்ணு மருமகளுகவும் வேணுமென்று தவம் புரியும் மேதாவி ரிஷிக்கு சாவித்திரி சரசுவதி துர்காதேவி இம்மூன்றுச்சிகளுடன் வந்து புத்திரியானுளேன்று சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் சௌனகரே பிருகுவேதனை சாக்ஷுஷ மனுவந் தரத்தில் இருபத்து நான்கு வருஷத்தை அதிகமாகவுடைய பதி னான்கு யுகம் போனபிறகு ஒருக்கால் அந்த கமலையானவள் யோக நித்திரையோடு கூடிய விபுவாயும் வியாபக வஸ்துவாயும் சமஸ் தத்துக்கு மாதாரராயும் சநாதனராயுமிருக்கிற ஸ்ரீமந் நாராயண னைப்பார்த்து எனது அம்சாம்சத்தில் நின்று முண்டானவளாயும்

என்னுடைய சத்தியினால் விருத்தியடைந்தவளாயுமிருக்கிற இந்த யோகநித்திரையானவள் ஹரிக்கு மிகவும் வல்லபையானாளே யென்று சிந்தித்து சர்வலோக மகேசுவரியான அந்த மகாலெட்சுமியானவள் ஓய் துஜரே பிர்மபத்நியாகிய சாவித்திரியையும் சரசுவதிதேவியையும் மனதாலே ஸ்மரித்தாள். உடனே ஸந்நிதானத்தை அடைந்த இந்த மூன்று தேவிகளுடன் கூடினவளாய்க்கொண்டு அதே க்ஷணத்திலே முப்பத்திரண்டு லட்சம் சங்கைகளோடே கூடிய பாலன சக்திகளோடும் அந்த பாலன சக்திகளுக்கு இரண்டு பங்கு அதிகமாகிய ஸம்ஹார சக்திகளோடும் வாரீர் முனியே இன்னம் வேறையாயிருக்கிற சுரேந்திரானுடைய சக்திகளோடும் பூமியின் சக்தியையுமிழுத்துக்கொண்டு சர்வ சக்திகளோடுங்கூடிவனவளாய் கோபத்தையடைந்தவள்போல பிரணய கோபத்தினால் திரோதானத்தையடைந்து பங்குனி மாதம் சுக்கிரவாரங்கூடிய பூர்ணிமாதினத்தில் உத்திர நட்சத்திரத்தில் புண்ணியமான இந்த சீநிவாச க்ஷேத்திரத்தில் சுவேச்சையால் ஆவிர்ப்பவஞ்செய்தாள். அந்த க்ஷேத்திரத்தில் தவஞ் செய்பவர்களுக்குள் சிரேஷ்டராயும் சர்வஞ்ஞராயும் சர்வ சாஸ்திரத்தை அறிந்தவராயும் தவத்தையறிந்தவராயும் ஞானத்தால் நிர்மலராயும் வேத வேதாங்கத்தையறிந்தவராயும் வேதங்களிலே நிட்டையையுடையவராயும் இந்திரியங்களை ஜெயித்தவராயும் கோபத்தை ஜெயித்தவராயும் சத்துருக்களை யுடைத்தாகாதவராயும் சிரமத்தை ஜெயித்தவராயும் யோகமென்ன யோகாங்கமென்ன இதுகளின் தத்துவத்தையறிந்தவராயும் யோகங்களில் நிஷ்டையையுடையவராயும் சமம் முதலான குணங்களையடைந்தவராயும் சதா தியானத்தை பாராயணமாக உடையவராயும் சர்வசம்சயத்தையும் பேதிப்பவராயும் சந்தியாவந்தனாதி உபாசனத்தில் ஆசக்தியையுடையவராயும் அகில மந்தரங்களையும மனதாலறிந்தவராயும் உபதேசம் பண்ணுகிறவராயும் (ஓய் சௌநகரே) பிராம்மணாளை தெய்வமாக உடையவராயும் பிர்மத்தினிடத்தில் நிஷ்டையையுடையவராயும் வேதாந்தமாகிற பிர்ம்மவித்தையில் தேறினவராயும் பராவரதத்துவத்தையறிந்தவராயும் நாராயணனை பரமமான ஸ்தானமாக உடையவராயும் பிர்மவித்தையையறிந்தவர்களாயும் தோஷமில்லாத ஞானமாகிற ஜலத்தாலே யலம்பப்பட்ட சுசேஷ கல்மஷங்களையுடையவர்களாயும் சர்வ பூதங்களுக்கும் ஹிதத்தை பண்ணுவதில் முயற்சியெடுத்

தவர்களாயும் யெல்லாவற்றையுமறிந்தவர்களாயும் யோகத்தை தெளிவுற தெரிந்துகொண்டவர்களாயும் பகவானிடத்தில் பக்தியை செலுத்தினவர்களாயும் சதா தியானத்தையே முக்கியமாக உடையவர்களாயும் பரமாத்மாவாயும் தனக்குமேலே உத்தமனை யடையாதவராயுமிருக்கிற வாசுதேவனை தியானிப்பவர்களாயும் நல்ல விருதத்தோடு கூடினவர்களாயுமிருக்கிற சிஷ்யர்களான ஏழாயிர முனிவர்களாலே சேவிக்கப்பட்டிருக்கிற மேதாவியென்று பிரசித்தரான மகாரிஷி அந்த சுகந்தவனத்திலே வாசுதேவனையும் ஜகத்குருவாயுமிருக்கிற ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து வேறொருவரால் நடத்தமுடியாத தவத்தை பதினாயிரம் வருஷம் பண்ணிக்கொண்டிருந்தார். எந்த தினத்தில் மகாலட்சுமி அந்த ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்திலுதித்தாளோ அந்த தினத்திலேயே முனிச்சிரேஷ்டரான அந்த மேதாவி மகா முனியானவர் மணிமுத்தாநதியில் மாத்தியான்னிகமென்கிற கிரியையைப்பண்ணிவிட்டு கனிகளாலும் புட்பங்களாலும் துளிர்களாலும் நிறைந்தும் புட்பத்தின் தூளிகளாலே பரப்பியும் தேன்களைக்குடித்து அந்த ரசத்தாலே மதித்துச் சுற்றி சுழன்று வருகிற வண்டுகளாலே நெருங்கியும் மூக்குக்களாகிற வீணையிலே சஞ்சரியா நிற்கிற பஞ்சமமென்கிற சுவரங்களைப் பண்ணுகிற குயிற்களாலே மனோகரமாயும் ஒரு வியாஜமன்றியிலிருக்கிற காந்திகளோடு கூடியும் நர்த்தனங்களை பண்ணு நிற்கிற மயிற் கூட்டங்களையுடையதாயும் தேனின் பிரவாஹத்தில் மூழ்கிக்கிளம்பி வருகிற யிளந்தென்றற் காற்றாலே அலைக்கப்பட்டும் மானவாளுடைய நேத்திரங்களுக்குப் பிரியமாயுமிருக்கிற காலமில்லாத காலத்திலே புஷ்பித்து விளங்குகிற கெந்தாரணியத்தை சர்வ திக்குகளையும் பார்த்து யீதென்ன அற்புதமென்று மனதில் வியப்போடு சிந்தித்து லக்ஷ்மீபதியான ஹரியை தியானம் பண்ணிக்கொண்டு மணிமுத்தாநதியின் தென்கரையில் நின்று அந்நதியின் ஆக்கிநேயத்திற்றோன்றுகிற ஓர் வஞ்சுள விருக்ஷத்தின் மூலத்தை நோக்கினார். அந்த மகாத்துமாவானவர் அந்தத் தருவின்மூலத்தில் சோபனமான கன்னியாரூபத்தை தரித்தவளாயும் கவரிமான்கள் தன்னுடைய சிறந்த கவரிமயிர்களை இவளுக்கு உலுப்பையாகக் கொடுத்து அத்தை இவள் அலக்ஷியஞ்செய்து பின்னாலே தள்ளிவிட்டாளோவென்று சந்தேகத்தை பண்ணுவதாய் கறுத்த வண்டின் கூட்டத்துக்கு

சமானமான தலைமயிர்களோடு கூடியவளாயும் வாரீர் முகியே மன்மதனுடைய வில்லினுருவத்தைப் பழிக்கும் கொடிகள் போன்ற இரண்டு புருவங்களாலே மனோகரமாயும் அகன்று மழமழவென்று சஞ்சலங்களாய் வித்தாரமான இரண்டு நேத்திரங் களையுடையவளாயும் கண்ணாடிபோலேயிருக்கிற இரண்டு ரத்தின மயமான காதோலைகளாலே அலங்கரிக்கப்பட்ட முக பங்கஜத்தை உடையவளாயும் ஒருகாரணமன்றியிற் செய்யப்பட்ட புன்சிரிப்பின் அழகினலே ஜயிக்கப்பட்டிருக்கிற நிர்மலமான நிலையையுடைய வளாயும் தன்னுடையவதா சோபையினல் தள்ளிவிடப்பட்ட வாசனையோடுகூடி மிருதுவாயிருக்கிற துளிர்களையுடையவளாயும் அழகாகிற அமிர்தசாகரத்தில் மூழ்கி நெருங்கிய கழுத்தாகிற சங்கத்தையுடையவளாயும் சுகுமாரமான இரண்டு புஜங்களினல் ஜயிக்கப்பட்டிருக்கிற இரண்டு கருநெய்தல் மாலையையுடையவளா யும் மரகத மணிமயமான இரண்டு சுதா கும்பத்தின் காந்தியை அபகரியாகிற்கிற குயங்களை உடைய்வளாயும் தனது ரோமாவளி யால் ஜயிக்கப்பட்டிருக்கிற வனகஜத்தின் மதஜலப்பெருக்கை உடையவளாயும் தனது தேககாந்தியாகிற நதியின் சுழியோ வென்னலாம்படியிருக்கிற தொப்புளையும் மும்மடிப்புகளாகிற வலைகளையுமுடையவளாயும் இடையாகிறது வண்டலதைக்கு ஆதாரமாகக் கட்டப்பட்ட கயிறுபோன்ற சுவர்ணபயமான வரை நூல் மாலையை உடையவளாயும் இவளது நிதம்பம் என்கிற பிற் நட்டாகிற விசால மண்டபத்தின் மணிமயமான தோரணஸ்தம் பம் போன்ற இரண்டு துடைகளை உடையவளாயும் ஜயிக்கப்பட்டி ருக்கிறவனங்கனது விரண்டாம் பிரைகளை உடைய மனோகாமான விருஜங்கையென்று சொல்லப்படுகிறவாடுசதைகளை யுடையவளா யும் விளங்காநின்றுள்ள மாணிக்கமயமான பாதச்சிலம்போடுகூடி சந்திரன்போல பிரகாசமுடைய நகங்களை உடையவளாயும் இரண்டு திருவடிகளுடைய சௌந்தரியத்தாலே ஜயிக்கப்பட்டிருக்கிற செந்தாமரை மலரை உடையவளாயும் அவளது சரீரமாகிய சண் பகக்கொடியானது பூத்தலர்ந்தாப்போல சர்வாபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டவளாயும் சர்வலக்ஷணங்களோடுகூடினவளாயும் கௌமாரம் யௌவநமென்கிற இரண்டவஸ்தைகளுடைய அதிக மான காந்தியாகிற பிரவாஹத்துக்கு ஓர் திவ்ய நதியாயும் சமான மானவாகாரம் வயது காந்தி இதுகளை உடைய மூன்று சகிக

ளோடு விளையாடுகிறவளாயும் அகில ஜகத்துக்கும் ஆதாரமாயும் அதில் ஜகத்துக்களாலேயுமாஸ்ரயிக்கப்பட்டவளாயும் சர்வாவயவ சுந்தரியாயும் சாமளாங்கியாயுமிருக்கிற மகாலட்சுமியைப்பார்த்து அவளது சமீபத்தை யடைந்து அவளை யதிதியென்றும் சங்கையால் அதிகமான கிருபையாலே மகாமுனியான மேதாவி பிரசனம் பண்ணினர்.

மேதாவியின் வாக்கியம்.

அடி குழந்தாய் நீ யார் யெவ்விடத்திலிருந்து யாது காரணத்தாலிந்த தபோவனத்தை நீயடைந்தாய். உன்னுடைய மாதா பிதாக்களார். வாராய் தோஷமில்லாத குணத்தோடு கூடியவளே இவை யெல்லாவற்றையும் எனக்குச் சொல்லக்கடவாய்.

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் பிர்ம்மநிஷ்டரான சௌனகரே மகாபாக்கியசாலிநீயான அந்த மகாலெட்சுமியும் தபோநிதியான அந்த மேதாவியை நமஸ்காரஞ்செய்து வார்த்தை சொல்ல அறியாதவள்போல ஒரு வார்த்தை சொன்னாள்.

லட்சுமியின் வாக்கியம்.

வாரீர் வித்வானே எனக்கு மாதாவுமில்லை பிதாவுமில்லை. யென் பிறப்பையும் யென் நாமதேயத்தையும் நானறியேன். யெங்கேயோ ஓரிடத்திலிருந்து யெந்தக்காரணத்தாலோ வந்தேன். வாரீர் தபோநிதியே உம்மைத்தானே பிதாவாகவும் மாதாவாகவும் பண்ணிக்கொண்டு இந்த தபோவனத்தில் வசிக்க விரும்புகிறேன்.

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் பிரும்மநிஷ்டரே இவ்விதமாய் அந்த லெட்சுமியினால் சொல்லப்பட்ட மேதாவி முனியானவர் அந்த லெட்சுமியைப் பார்த்து வாராய் குழந்தையே இவ்விதமாக உனக்கு அபிப்பிராயமிருந்தால் பரிசுத்தமான யெனதாசிரமத்துக்கு வாவென்று

சொல்லி தயாநிதியான அந்த மேதாவியானவர் புண்ணியமாயும்
சர்வபாபபயத்தையும் போக்கி வைப்பதாயுமிருக்கிற தனதாச்சிர
மத்தைக்குறித்து மகாலெட்சுமியை அழைத்துவந்து அவராலே
யெந்த வஞ்சுள விருக்ஷத்தின் மூலதேசத்திலவள் பார்க்கப்பட்
டாளோ அந்த விருக்ஷத்தின் பேரையே அவளுக்கு இடுகுறியாக
வைத்து வஞ்சுளைவல்லியென்றுநாமஞ்சாற்றிவைத்தார். மகேசுவரி
யான அந்தவஞ்சுளையும் மூன்றுபேர் சகிகளோடும்கூட பிதுருவச்
சகலயாய்க்கொண்டு பிதாவாகிய மேதாவிக்குப்பணி விடைகளைச்
செய்துகொண்டு அவ்விடத்தில் ஆதுராளாய் அதிதிகளாகவந்த
பிராமணாளை அதிதிப்பிரியையாகி அவளும் ஆதரவோடு பரமமான
தனது கிருபையினாலே பூஜித்து வந்தாள். அவளது திவ்விய
கடாக்ஷத்தால் விருத்தியடைந்து வருகிற தபோபலத்தையுடைய
அந்த ஆச்சிரம பதமானது இரண்டாவது சுவர்க்கம்போல விளங்
கிற்று. இவ்விதமாய் விமலமாய் விசுத்தமான தபோவனமான
அந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் மேதாவிரிஷி குமாரியாகிய அந்த
வஞ்சுளையும் புராண புருஷனான தன் வல்லபனான நாராயணனைத்
தியானம்பண்ணிக்கொண்டு மூன்றுசகிகளுடன் விருத்தியடைந்து
வந்தாள்.

பிர்மாண்டபுராணத்தில் உத்தரகாண்டத்தில் பிருகு சௌனக
சம்வாதத்தில் ஸ்ரீநிவாச மாகாத்துமியத்தில் லட்சுமியாவிர்ப்
பவமென்கிற நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(ஐந்தாவது அத்யாயத்தால் அசுராளாலே ஜயிக்கப்பட்ட தேவ
தைகள் பிர்ம்மாவோடுகூட திருப்பாற்கடலிலேபோய் பகவானை
தோத்திரஞ் செய்து அந்த பகவானாலே சமாதானஞ் சொல்லப்
பட்டு தங்களிருப்பிடம் போனார்களென்று சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் சௌனகரே அந்தகாலத்தில் மகாபாக்கியசாலிகளாகிய
இந்திரன் முதலிய சமஸ்த தேவர்களும் சர்வசக்திகளால் விடப்
பட்டவர்களாய் யுத்தத்தில் திதிபுத்திராளாயும் தநுபுத்திராளாயு

மிருக்கிற அசுரர்களே ஜயிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு பரமேட்டியான பிர்ம்மாவை சரணம்புக்கு வாரீர் சர்வலோக பிதாமகரே ஜகந்நாதரே தைத்தியாள் தானவாள் இவர்களிடத்திலிருந்து உண்டான ஒருவரால் தாண்டிவைக்கமுடியாத இந்த பயத்தில் நின்றும் எங்களை ரக்ஷிக்கக்கடவீர். நாங்கள் தேஜஸையிழந்து பலவீரியங்கள் குன்றி சம்பத்தை யிழந்து சக்தியற்றவர்களாக ஆனோம். இது யெதினாலுண்டாயிற்று. ஓய் மகாபாகரே சொல்லவேணுமென்று கேட்டார்.

.பிருகுவின் வாக்கியம்.

இப்படி இந்திராதி தேவதைகளாலே விஞ்ஞாபிக்கப்பட்ட சர்வலோக பிதாமகராயும் பகவானாயுமிருக்கிற பிர்ம்மாவானவர் அத்தேவதைகளைப்பார்த்துச் சொல்லுகிறார்.

பிர்ம்மாவின் வாக்கியம்.

வாரீர்கோள் சுரசுத்தமரே நானுமுங்களைப்போலவே சக்தியையிழந்தவனாக இருக்கிறேன். உங்களுக்கும் எனக்கும் சர்வலோகங்களுக்கும் சர்வவியாபகராய் வாசுதேவனாயிருக்கிற அந்த ஹரி ஒருவரே நாதனாயிருக்கிறாராகையால் அவரையே நாம் எல்லோரும் போய் சரணமடைவோம்.

பிருகுவின் வாக்கியம்.

ஓய் சௌநகரே இவ்விதமாய் அந்த பிரம்மாவானவர் தேவதைகளைப்பார்த்துச் சொல்லி அந்த தேவர்களோடு கூடினவராய் திருப்பாற்கடலின் வடகரையில் போய் ஜனார்த்தனனை அந்த பகவானை துதி செய்தார்.

பிர்ம்மாவின் துதி.

யாதொருவரிடத்தில் நின்று இந்த லோகங்கள் உண்டாயிற்றோ எவராலே சகல பிராணிகளும் சீவிக்கிறதோ எவரிடத்தில் லயத்தை அடையப்போகிறதுகளோ அந்த மகேசுவரரை பிரணமஞ் செய்கிறேன். ஓய் நாராயணனே பராவரேசராகிய உமக்கு நமஸ்காரம் வாசுதேவராயும் விஷ்ணுவாயும் இருக்கிற பரமாத்து

மாவான உமக்கு நமஸ்காரம். பரமரூபராய் பூதரூபராய் இருக்கிற உமக்கு நமஸ்காரம். காரியகாரண ரூபராயும் சர்வரூபராயும் இருக்கிற உமக்கு நமஸ்காரம். அமூர்த்தராயும் சுமூர்த்தராயும் மூர்த்தாமூர்த்த சுவசுரூபியாயும் இருக்கிற உமக்கு நமஸ்காரம். இந்த ஜகத்தில் யெந்தபதார்த்தங்காணப்படுகிறதோ கேழ்க்கப் படுகிறதோ அந்தப்பதார்த்தத்தின் உள்ளும் புறமும் வியாபித் திருக்கிற விஷ்ணுவாகிய உமக்கு நமஸ்காரம். லகுவான பதார்த் தத்துக்குள் லகுவாயும் கனமான பதார்த்தத்துக்குள் கனமான வராயும் குறுகின பதார்த்தத்துக்குள் குறுகினவராயும் நீண்ட பதார்த்தத்துக்குள் நீண்டவராயும் சங்கசக்கர கெதை கடகம் சார்ங்கமென்கிற கோதண்டமிதுகளை தரித்தவராயும் சர்வ வியாபி யாயும் பரமாத்துமாவாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். ருக்கு வேதம் யஜுர்வேதம் சாமவேதம் அதர்வண வேதம் சுரூபி யாயும் சப்த பிர்மசுவரூபராயும் ரூபமில்லாதவராயும் சிக்ஷாகல்ப சுரூபியாயும் சந்தசுசோதிடம் நிருக்தி வியாகரணம் மீமாம்சை நியாயமிதுகளை சரீரமாகவுடையவராயும் தர்மசுரூபியாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். யாதொரு மச்சரூபியாகிய உம்முடைய ஒரு ரோம கூபத்தின் யேகதேசத்தில் மனு கல்பத்திலுண்டாகிய பிரளயகால யேழுசமுத்திரத்தின் ஜலமுமடங்கியிருக்கிறதோ அந்த காரண மச்ச மூர்த்தியாகிய உமக்கு பிரணாமம் பண்ணுகிறேன். யாதொரு உம்முடைய முதுகினேகதேசத்தினாலே அநேகமாயிரம் அண்டங்கள் லீலையினாற்றரிக்கப்படுகிறதோ அக்கூர்மரூபியான உமக்கு வந்தனந்தந்தனன். உம்முடைய யாதொரு முளைபோன்ற யீற்றுப்பல்லின் நுனியினால் முந்தியொருக்கால் பிரளயத்தில் மூழ் கிப்போன இந்த விசும்பரையென்கிற பூமிதேவியானவள் எடுக்கப் பட்டாளோ அந்த வராகரூபியான உமக்கு நமஸ்காரம். யாதொரு நீரானவர் வச்சிராயுதத்துக்குச் சமானமான நகங்களினால் தைத் தியேந்திரனான ஹிரண்ணிய கசிபுவின் மார்பைப்பிளந்தீரோ அந்த நரஹரிரூபியான உம்முடைய பாதகமலங்களில் வணங் கினேன். இந்த பிர்ம்மாண்டம் முழுமையும் யாதொரு உம் முடைய பாதபதுமத்தை வைக்கப்போரவில்லையே அந்த வாமன ரூபியான உமக்கு பிரணமம். யாதொரு உம்மாலே துஷ்ட மகீ பாலாளாகிற வாழைக்காடானது அழியச் செய்யப்பட்டதோ அந்த பரசுராம ரூபியான உமக்கு நமஸ்காரம். பரிபூரணமான

வீரியத்தோடுகூடிய யாதொரு உம்மால் ராக்ஷசாதிபனுன ராவண னுடைய பத்துத்தலைகளும் கொத்தோடு வரிசையாய் அறுபட் டதோ அந்த சீதாராமனுன உம்முடைய பாதபங்கயத்தை யெனது சிரசுக்கு அலங்காரமாக்கினேன். யாதொரு உம்முடைய கலப் பையினுல் யமுனுநதியானதிழுக்கப்பட்டதோ பிரலம்பாசுரஹரி யாகிய அந்த பலராமனுன உமக்கு நமஸ்காரம். கோபிமார்களு டைய கும்பஸ்தனங்களின் குங்குமங்களினுல் அடையாளம் செய்யப்பட்ட திருமார்போடு கூடிய யாதொரு உம்மாலே இந்த பூமியின் பாரமானது நீக்கப்பட்டதோ அந்த கிருஷ்ண ரூபியான உமக்கு அனேககோடி பிராணுமம் பண்ணுகிறேன். இனிமேல் கலியினந்தத்தில் கற்கியாக அவதாரஞ்செய்யப்போகிற உம்மாலே மிலேச்சஜாதியாக வரப்போகிற சைத்தியதானங்களை வதம் செய் யப்போகிறீரோ அந்த கற்கிரூபியான உமக்கு வந்தனந்தந்தனன்.

பிருகுவின் வாக்கியம்.

இவ்விதம் துதிசெய்த பரமேட்டியான அந்த பிர்ம்மாவுக்கு பிரசன்னராய் அந்த ஜநார்த்தனனுனவர் தேவர்களுச்கு பிரத்திய க்ஷமாய் தர்சனங்கொடுத்தார். இப்படி தர்சனங்கொடுத்தவரா யும் புண்டரீக மலர்போல நீண்ட திருக்கண்களையுடையவராயும் பிரசன்னமான முகாம்போஜத்தையுடையவராயும் சங்க சக்கரத் தைத்தரித்தவராயும் மைமலைபோலக் கறுத்த திருமேனியை யுடையவராயும் சகல ஜகத்துக்கும் ஆதாரராயும் தேவதேவேசனு யுமிருக்கிற அந்த வாசுதேவனை அந்த தேவர்கள் தங்கள் கண்கள் குளிரும்படி தர்சனஞ்செய்து பெருத்து புளகித்த சரீரத்தை யுடையவர்களாயும் சந்தோஷத்தையடைந்த மனதோடுங்கூடின வர்களாய் பிர்மாவோடு கூடிக்கொண்டு அந்த பகவானை தோத்தி ரம் பண்ணினுர்கள்.

தேவதைகளின் துதி.

தயாநிதியான வாரீர் அச்சுத பகவானே உமக்கு ஜயமுண் டாகக்கடவது. அகிலமான தானவாளை நாசஞ்செய்தவரான நீர் ஜெயத்தை அடையக்கடவீர். வாரீர் அகிலமான சத்தான குணங்களுக்கு வாரிதி போன்றவரே ஜயத்தை சுவபாவமாக

குணமாக அடையக்கடவீர். வாரீர் செந்தாமரை மலர்போன்ற நேத்திரங்களையுடையவரே உமக்கு மேல் மேல் ஜெயமுண்டாகக் கடவது. அற்புதமான வைபவத்தை யுடையவரார்யும் சத்துக்களுக் குப் பதியாயுமிருக்கிற உமக்கு ஜெயமுண்டாகக்கடவது. உம்மை யாச்சிறயம் பண்ணினவர்களுக்கிஷ்டத்தை நிறைவேற்றிக்கொடுக் கிறகேசவனே உமக்குஜெயம். உற்பத்தியில்லாதவராயும் இலக்குமி தேவிக்கு யீசராயும் பூமிக்கு பதியாயும் அஞ்சனம் போன்ற நிறத் தையுடையவராயுமிருக்கிற உமக்கு ஜெயமுண்டாகக்கடவது. யெங் களுக்கு நாதனான ஜகந்நாதரே உம்முடைய திருவடிகளை சரணம் புகுந்த யெங்களை ரக்ஷிக்கக்கடவீர். யெங்களுடைய சகல சக்தி களும் நஷ்டத்தை யடைந்துவிட்டது. யெங்களது தேகபலம் காந்தி இதுகளும் நஷ்டத்தை யடைந்துவிட்டதுகள். காப்பாத்தக் கடவீர்.

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் சௌநகரே அசுரர்களாலே அடிபடப்பட்டு அப ஜெயத்தை அடைந்த அந்த தேவர்களாலிவ்விதமாய் தோத்திரஞ் செய்யப்பட்ட அந்த ஜெகந்நாதனான பகவானானவர் அந்தத்தேவர் களைப்பார்த்து பிரீதியினால் ஒரு வார்த்தை சொன்னார்.

பகவான் வாக்கியம்.

வாரீர் தேவதைகளே யென்னுடைய திவ்யமாயிருக்கிற நான் நடத்தும் தர்மத்தையே தனக்கு தர்மமாக உடையவளாயும் பாவாபாவமயையாயும் நித்தியயாயும் அத்தியந்தம் சிரேஷ்டையா யும் எனக்கு மிகவும் சம்மதையாயும் இச்சாரூபியாயும் கிரியை ஆனந்தம் ஞானானந்தம் இதுகளின் சுரூபிணியாயும் ஐந்துவிதமான கிருத்தியத்தைச் செய்பவளாயும் சுத்தையாயும் பதும மலர் போன்ற கண்களையுடையவளாயும் ஒருவிதமான அபாயத்தை யடையாதவளாயும் தோஷமில்லாமல் சுந்தரமான சர்வாவயவத் தையுமுடையவளாயும் சர்வலோக மகேசுரியாயும் அசேஷமான ஜெகத்துக்கும் ஆதாரமுடையவளாயும் தேவியாயும் ஷாட்குண் ணியரூபிணியாயும் சகலங்களான என்னுடைய சக்திகளுக்கெல் லாம் நாயகியாயும் எனக்கு வல்லபையாயுமிருக்கிற யாதொரு மகா

லெட்சுமியுண்டோ அந்த லெட்சுமியானவள் பிரணய கோபத்தா லெனது மனதைக் கலக்காநின்றுகொண்டு என்னுடைய சர்வ சக்திகளோடுந் திரோதானத்தை யடைந்துவிட்டாள். ஆகையினல் வாரீர் தேவர்களே உங்களுடைய சக்திகளும் நஷ்டமாய்விட்டது. நான் யெப்போது அந்த தேவியோடு சேர்ந்தவனாக ஆகிறேனோ அப்போது தோஷமில்லாமலிருக்கிற உங்களுடைய சக்திகள் மறு படியும் உங்களுக்கு உண்டாகப்போகிறது சந்தேகமில்லை. வாரீர் சுரசத்தமாளே இந்த சராசரமான சகல ஜகத்தும் அந்த மகாலெட் சுமியினது அநேகமாயிரம் லட்சம் சக்தியினுடைய ஒருகலையின் ஓரம்சத்தினல் விருத்தி அடைந்தும் வியாபித்தும் விளங்காநின்று மிருக்கிறது யென்று இவ்விதமாய் அந்த பகவானான அப்பிரமேய ரான விஷ்ணுவானவர் பார்த்துக்கொண்டிருக்கிற அந்த தேவதை களினெதிரிலேயே அந்தர்தானத்தை யடைந்துவிட்டார். வாரீர் முநியே யஞ்ஞசேஷத்தை புஜிப்பவர்களாய் நிர்மலமான மனதை யுடையவர்களாயிருக்கிற அந்த தேவர்கள் தயாளுவான அந்த ஹரியினல் இவ்விதமாய் சொல்லப்பட்டு தங்கள் மனோ துக்கங் களை விட்டவர்களாய்க்கொண்டு பிரணதாளுடைய வார்த்தையை அபகரியாநிற்கிற அந்த ஹரிக்கு பிரணமஞ்செய்து யெப்படி வந் தார்களோ அப்படி தங்களிருப்பிடமாகிய சுவர்க்கம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஷ பிரம்மாண்ட புராணத்தில் உத்தரகாண்டத்தில் பிருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாச மாகாத்துமியத்தில் தேவதை களுடைய துதியென்கிற ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இதின் ஆறுவது அத்தியாயத்தால் ஹரியானவர் வாசுதேவாதி ஐந்து மானிட பிராமண ரூபத்தை தரித்து நான்கு திக்குகளிலும் ஆகாசத்தில் கருடனுமாக மகாலெட்சுமியை தேடிக்கொண்டு இந்த சுகந்த வனத்தில் லட்சுமியைக்கண்டு மேதாவி ரிஷியால் துதிக்கப்பட்டு அந்த ரிஷியின் பிரார்த்தனையினல் அம்மகாலட்சுமி யோடுங்கூட இந்த க்ஷேத்திரத்தில் வாசுதேவாதி ஐந்து ரூபத்தாலே இன்னமுந்தருசனங் கொடுத்துக்கொண்டு விளங்குகிருரென்று சொல்லப்படுகிறது.)

பிருகுரிஷியின் வாக்கியம்.

வாரீர் சௌனகரே மேல் நடந்த பகவத்சரித்திரத்தை சாவதானமாகக்கேளும். எல்லாவற்றையுமறிந்தவராயும் பிரபஞ்சங்களாலே பூஜிக்கப்பட்டவராயும் தன்னுடைய கிரீடையினல் லோகத்தை ஆநந்திப்பிக்கிறவராயும் தயாநிதியாயும் சர்வக்ஞராயும் விசுவேசராயும் பகவானுயுமிருக்கிற அந்த விஷ்ணுவும் தாமரைபூப்போன்ற நேத்திரங்களையுடைய அந்த் மகாலெட்சுமியை தேடுதலின் பொருட்டு வாசுதேவன், சங்கருஷணன், பிரத்யும்மனன் சாம்பனென்கிற புருஷோத்தமனென்கிற நாமங்களால் ஐந்துரூபத்தை தரித்தார். இவ்வைந்து மூர்த்திகளில் சங்கருஷணபகவானுனவர் கிழக்கு திக்கில் தேடிவந்தார். பிரத்யும்நபகவான் தெற்கு திக்கில் தேடிவந்தார். அநிருத்தனென்கிற ஹரியானவர் மேற்கு திக்கில் தேடிவந்தார். சாம்பனென்றுபெயரைத் தரித்த புருஷோத்தம பகவானுனவர் வடக்கு திக்கில் தேடிவந்தார். அந்த பதுமாசனியை கருடபகவானுகாயத்திற்றேடிவந்தார். இவ்விதமாய் வாரீர் விப்பரேந்திரரே இவர்கள் நான்கு திக்கிலுந்தேடிவராநிற்கச்செய்தே புண்டரீகமலர்போல நீண்ட நேத்திரங்களையுடைய அந்த வாசுதேவ பகவானுனவர் மாயா மநுஜரூபிணியாய் பத்மசம்பவயான மகாலெட்சுமியை பூமியின்கண் தேடிவந்தார். வாரீர் துவிஜரே இவ்விதமாய் வாசுதேவாதி ஐந்துமூர்த்திகள் கருடன் இவர்கள் சமஸ்தமான பிரம்மாண்டங்களிலும் அந்த மகாலெட்சுமியைத்தேடியுங் கண்டுகொள்ளாமல் முநிரூபதாரிகளாகிய இவர்கள் வாடின தேகத்தோடுகூடி. மிகவுமிளைப்பை அடைந்து சர்வாபீஷ்ட சித்தியைக்கொடுப்பதாயும் புண்ணியமாயுமிருக்கிற இந்த சுகந்தாரண்யத்தை யடைந்தார்கள். அப்போது அந்த சுகந்தவனத்திலிருக்கிற மேதாவிரிஷியின் சிஷியாளான முநீசுவராளானவர்கள் அற்புதமான தபோரூபத்தைத் தரித்து அதிதிகளாக வந்திருக்கிற இவர்களைக்கண்டு பிரணமஞ் செய்து ஒரு வார்த்தை சொன்னுர்கள்.

111664

முநிகளின் வாக்கியம்.

வாரீர் மகாநுபாவர்களே தேவதேவரான பகவான் பிரசந்நராக ஆகிவிட்டால் மனுஷர்களுக்கு துர்லபமான வஸ்து ஒன்றி

ருக்கிறதென்கிறது கிடையாது. இப்போது நீங்கள் யாதொரு காரணத்தாலிந்த சுகந்தாரண்யத்தை யடைந்தீர்களோ அந்த திவ்வியதருசனகாரர்களான உங்களை யெங்களுடைய நேத்திரங்களினால் எப்போது தர்சனம் பண்ணினோமோ அப்போதே யெங்களுடைய ஜன்மமும் ஜீவிதமும் கர்மமும் சபலமாக ஆகிவிட்டது. சம்சாரதாபங்களை அபகரியா நிற்கிற உங்களுடைய சரணம்புஜங்களாலே யெங்களுடைய பர்ணசாலைகளாக ஆகும்படி செய்யக்கடவீர். வாரீர் துவிஜாளே சூர்யனானவர் வெளிப்படையாயிருக்கிற இருளொன்றைமாத்திரம்போக்கசாமர்த்தியமுடையவர். நீங்களோ வென்றால் அக்ஞானத்தாலுண்டான அந்தக்கரணவிருள்களையும் போக்கவல்லவர்கள். பாபத்தைபோக்கிக்கொள்வதாய் தவஞ்செய்ய முயற்சியெடுத்த நாங்களோவென்றால் தர்சனம் பண்ணின உடனே பாபங்களைப்போக்கிக் கொடுப்பவர்களான உங்களுடன்றைவாதீனத்தால் சேர்ந்து கிருதார்த்தர்களாக ஆனோம். ஸ்ரீநிவாஸமென்னும் ஹரிக்ஷேத்திரமாகிய இந்த வனத்தில் எங்களுக்கு ஆசாரியரான மேதாவி யென்கிற மகாமுநியானவர் வாசுதேவனைக் குறித்து தவஞ்செய்து அவரை ஆராதித்துக்கொண்டு வசிக்கிறார். உங்களுடைய வரவினால் சந்தோஷத்தை அடையுபவரும் உங்களை தர்சித்து கிருதார்த்தராகச் செய்விக்கவேணும்.

பிருகுவின் வாக்கியம்.

இவ்விதமாய் அந்த ரிஷிகளாலே பூஜிக்கப்பட்ட அந்த வாசுதேவாதிகளானவர்களவர்கள் வார்த்தையை மிகவுமாதரித்து அங்கீகரித்து அஞ்சலிபண்ணிக்கொண்டு நிற்கிற அந்த ரிஷிகளோடுங்கூட ஓய் பிர்ம்மநிஷ்டரே மிகவும் சந்தோஷ சித்தர்களாய்க் கொண்டு அந்த மேதாவிரிஷியின் பிராம்ம லட்சுமியோடு கூடிக் கொண்டிருக்கிற ஆச்சிரமத்தை அடைந்து மஹாத்துமாக்களாயிருக்கிற அந்த வாசுதேவாதி மூர்த்திகளானவர்கள் யெங்கும் வைஷ்ணவ தேஜஸோடுகூடிய அவ்வாச்சிரமத்தைப்பார்த்து அவ்விடத்தில் விஷ்ணு விஷயமான உத்தமமான துதிவசனங்களைக் கேட்டு அடிக்கடி தலைகுலுக்கி மிகவும் நல்லது நல்லதுயென்று பிரசம்சை பண்ணினார்கள். அப்போது தபசுபண்ணுகிறவர்களுக்குட் சிரேஷ்ட்டராய் மகாதேஜோவானாயிருக்கிற மேதாவி

ரிஷியானவர் தன்னுடைய ஹிருதயகமலத்தில் பரப்பிர்ம்மமான வாசுதேவனைப்பிரத்தியக்ஷமாகப்பார்த்து பரமாத்துமதியானத்தில் நின்று மொழிந்தவராய் வந்திருக்கிற அந்த அதிதிகளாகிய அந்த பிராமண ரூபத்தை தரித்த வாசுதேவாதிரிஷிரூபிகளைப் பார்த்து அர்க்கிய பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு யெதிர்சென்று வந்து அவர்கள் யெல்லோர்களுக்கும் ஆசனங்கொடுத்து அர்ச்கியம் பாத்தியம் ஆசமனீயம் மதுபர்க்கம் கந்தமூலபலங்களிதுகளை சமர்ப்பிக்க யெத்தனப்படுவதைப்பார்த்து ஆகாயத்தில் நின்றும் வருகிற கருடபகவான் அவ்விடத்தில் கந்நியாரூபத்தை தரியாநின்று ஆச்சரியப்படும்படியான திவ்வியமானவாகாரத்தை தரித்தகமலசம்பவையான அந்த மகாலட்சுமியைக்கண்டு தன்னுடை தோளைக்கட்டிக்கொண்டு இங்கே லட்சுமி இருக்கிருளென்று பகவானை வாசுதேவனுக்கு சங்கேதமாக காட்டக்கண்டு நாங்கள் விவாஹமில்லாத கன்னிகளிடத்தில் தீர்த்தம் முதலானதுகளை வாங்குகிறதே தவிர வேறு சிலரிடத்தில் வாங்குகிறதில்லை யென்கிற விரதமுடையவர்களாகையால் அப்படிக்கொடுத்தால்கிரஹித்துக்கொள்ளுவோமில்லாவிட்டால் விரதபங்கமெங்களுக்கு உண்டாகும் யென்று சொல்லும் வாசுதேவன் வார்த்தையைக்கேட்ட மேதாவிரிஷியும் தன் புத்திரியாக அபிமானித்த வஞ்சுளவல்லியை அதிதி பூஜை பண்ணும்படி நியமித்து தான் ஆச்சிரமத்துக்குள் பகவதாராதனத்துக்குப்போய்விட்டார். அதற்குள் வஞ்சுளவல்லியும் தன் சகிகளுடன் அர்க்கியாதிகளை யெடுத்துக்கொண்டு அன்னமுலாவுவதுபோல மெதுவாக வந்தாள். அப்போது வாசுதேவ பகவானனவர் தன் பிரதான மகிஷியான வஞ்சுளவல்லியான மகாலட்சுமியைப்பார்த்து, ஓய் விப்பிரேந்திரரே! புன்முறுவலோடு கூடின முகாம்புயத்தோடு கூடியவராய்கொண்டு வேர்வை ஜலத்தோடு கூடிய விறற்களையுடைய அவளது பாணி கமலத்தை சீக்கிரமாகப் பிடித்தார். இப்படி வாசுதேவனாலே துளிர்போன்ற வஞ்சுளையின் கையான பிடிக்கப்பட்டிருக்கச்செய்தே அந்த லெட்சுமியும் கன்னிகாவத்தையை அடைந்திருப்பதால் சாமர்த்தியமில்லாதவள் போல கூக்குரலிட்டுக்கூப்பிட்டு வாரீர் யெனது பிதாவே மகரிஷியே புண்டரீகம்போலே மனோகரமாய் நீண்டு விளங்காநிற்கிற நேத்திரங்களையுடைய பூர்ணரான இந்தவதிதியானவர் அபூர்ணர் போல யெனது பாணிகமலத்தைப்பிடித்து கன்னியாவிருதபங்கத்

னதப்பண்ணினர் என்று சொன்னுள். அவ்வார்த்தையைக்கேட்ட மேதாவி ரிஷியும் கன்னிகா விருதத்தை தூஷணஞ்செய்த அந்த பரிபூர்ண சுவாமியை பகவானென்றறியாதவராய் பிராகிருத முனியைப்போல சாபங்கொடுப்பதாய் முயற்சிகொண்டுவருகிறமேதாவி ரிஷியை அந்த பகவான் பார்த்து அந்த சங்கசங்கரத்தை லட்சணமாகவுடைய தன்னுடைய திவ்வியமான அப்பிராகிருத விக்கிரகத்தை தரிசனம் பண்ணிவைத்தார். அந்த மேதாவி ரிஷியும் பிர்ம்மேந்திராதிகளுக்கும் துர்லபமாயிருக்கிறவப்பிராகிருதமான அந்த பகவத் ரூபத்தை தரிசித்து வேரற்ற மரம்போல பூமியில் விழுந்து அடிக்கடி நமஸ்காரஞ்செய்து அந்த பகவானை நான்கு பிரதக்ஷிணம் பண்ணி நிர்மலமான மனதோடு கூடினவராய்க் கொண்டு ஆனந்தத்தால் கண்ணீர் துளிப்ப இரண்டு கரங்களையும் குவித்துக்கொண்டு அந்த நித்தியசூரிகளுக்குப் பதியாகிய தேவ தேவனை வாயாரத்துதிசெய்யத்தொடங்கினர்.

மேதாவியின் துதி.

சிதாநந்த மூர்த்தியாய் பிறப்பில்லாதவராய் சர்வவியாபியாயிருக்கிற வாரீர் விஷ்ணுவே உம்மால் சர்வமும் ஜெயிக்கப்பட்டிருக்கிற ஜகத்தில் மற்றொரு பதார்த்தத்தை ஆதாரமாகவுடைத்தாகாதவராயும் சுகதுக்காதிகளாகிற தொந்த குணத்தை உடைத்தாகாதவராயும் சத்துருக்கள் நாசத்துக்காக சார்ங்கம்யென்கிறவில்லைகையிற்றரித்தவராயும் விசுத்தராயும் விகாரத்தை அடையாதவராயும் நிர்மலமாயுமிருக்கிற சுரூபத்தையுடைய பகவானே யாதொரு உம்மாலே பிர்ம்மாதிகளாகிய சமஸ்தமான தேவதைகளெல்லாரும் உம்முடைய குணங்களுக்கு தோற்று ஜயிக்கப்பட்டார்களோ அந்த பரப்பிர்மமாகிய உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். வாரீர் பராநந்த ரூபராயும் ஆசிரதாளுடைய தாபத்திரயத்தாலுண்டாகு மார்த்தியை அபகாரஞ்செய்பவராயும் ரமாகாந்தராயும் காருணிய மூர்த்தியாயும் தர்சிப்பவர்களுடைய மனதை கவர்ந்துகொள்ளும் திவ்யரூபத்தையுடையவராயும் முரனென்கிற அசுரனை ஜயித்தவராயும் ஜகத்திலுள்ள சக்திகளுக்கெல்லாம் மூலசக்தியாயுமிருக்கிற ஹரியே உமக்குப் பிரணாமஞ் செய்கிறேன். வாரீர் நித்தியமுக்தர்களாலே ஆச்சிரயிக்கப்பட்டிருக்கிற சரணத்தையுடையவராயும்

அவபோதமென்கிற ஞானம் முதலான ஷாட்குண்யபூர்ணராயும் ஸ்ரீ பூமி நீளைகளுக்கீசராயும் சதா வாசுதேவாதி மூர்த்தியைத் தரித்தவராயும் அகில ஜகத்துக்கும் ஆதாரபூதராயும் சங்கருஷண ரூபியாயும் பலம் ஞானம் இதுகளினுல் பூர்ணராயும் உமக்கு நீரே நாதராயும் ஜகந்நாதராயும் கர்த்தாவாயும் ஜகத்தின் சிருஷ்டிக்கு கர்த்தாவாயும் சுராளுக்கெல்லாம் அதிசராயும் தர்மாதிகாரத்தை யுடையவராயும் நித்திய விபூதி லீலாவிபூதி யென்கிற விபூதித்துவ யத்துக்குமீசராயும் வீர்யங்களுக்கு அதிநாதராயும் அநிருத்தரூபி யாயுமீசராயும் மோக்ஷமாகிற சமுத்திரத்துக்கு கரையாயும் சகல ஜகத்துக்கும் பரித்திராண கர்த்தாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். வாரீர் மகாநீலத்தினொளியை ஜயித்த தேககாந்தியையுடையவரா யும் உச்சாகம் பிரபு மந்திரம் யென்கிற மூன்று சக்திகளுக்குமீச ராயும் திவ்விய தேஜசுக்கு தானபூதராயும் ஜகந்நாதராயும் சாம்ப னென்கிற புருஷோத்தம ரூபியாயும் மகாகோரமான சம்சாரத்தை பரிக்கிறவராயும் மகாகற்பத்தைச்செய்விக்கிறவராயும் தயாமூர்த்தி யாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனே நானும்முடைய திருக்கல்லி யாண குணங்களால் ஜயிக்கப்பட்டு தேவரீர் திருவடித்தாமரை களுக்கும் பிரணமஞ் செய்கிறேன். ஓய் சௌநகரே இவ்விதமாய் மேதாவி ரிஷியால் பரமபக்தியினுற்றுதிக்கப்பட்டு வந்த பரமபுரு ஷரானவர் ஆனந்தமாகிற அமிர்த ஜலமாலே மோதா நின்றுள்ள மனசாகிற தடாகத்தையுடையவராய்க்கொண்டு ஆனந்தக்கண்ணீர் பெருகாநின்றும் நடுக்கமுற்ற சரீரத்தையுடையவராயும் மயிர்க் கூச்சலை அடைந்தவராயும் பயத்தோடுகூடியவராயும் பரபரப்போடு கூடியவராயுமிருக்கிறவம்மேதாவிரிஷியைப்பார்த்து ஒருவார்த்தை சொன்னார்.

பகவான் வாக்கியம்.

வாரீர் பிர்ம்மநிஷ்டரான மேதாவிமுநியே நான் பரிபூரண காமனுயிருந்தபோதிலும் நிர்மலமான சத்தையுடைய யாதொரு வர்கள் சதா யென்னிடத்திற் காமத்தோடு கூடிக்கொண்டிருக்கி ருர்களோ அவர்களிடத்தில் காமத்தோடு கூடினவனுகிறேன். ஓய் முநியே நான் சாரபந்தம் முதலானதுகளில்நின்றும் விடுபட்டவனு யிருந்தபோதிலும் பக்தாளிடங்களில் சிநேக பாசத்தால் நித்திய மாய் திரடமாக கட்டப்பட்டவனுகிறேன். சர்வேசுவரேசுவனு யிருக்கிற நான் ஒருவரால் ஜயிக்கப்படாதவனுக இருந்தபோதிலும்

யெனது அந்த பக்தனுல் ஜயிக்கப்பட்டவனுகிறேன். நானெருவருக்கும் வசப்படாதவனுயிருந்தபோதிலும் யாதொரு பக்தனுலே ஜயிக்கக்கூடாமலிருக்கிற உள்ளே நித்தியமாய் வசித்துக்கொண்டிருக்கிற காமாதிகான நித்திய சத்துருக்கள் ஜயிக்கப்பட்டிருக்கிறதுகளோ புத்திமானுன அந்த பக்தனுல் வசீகரிக்கப்பட்டவனுகிறேன். யாதொரு எனது பக்தனுல் சப்தாதிவிஷயங்களில் நின்றும் நேத்திரம் முதலான இந்திரியங்களுடைய சமூகமானது திருப்பப்படுகிறதோ அவன் வாசஞ்செய்யும் ஸ்தானமே யெனக்கு வைகுண்டத்தை காட்டிலும் இஷ்டமான ஸ்தானமாகிறது. யாதொரு பக்தனுனவன் தனது புத்திர மித்திர தாரங்களிடத்தில் சிநேகத்தைவிட்டு யென்னிடத்தில் சிநேகத்தைப் பண்ணுகிறுனே அவனுக்கு நான் பந்துவாக ஆகிறேன். அவனே எனக்கு பிரியனுன பந்துவாக ஆகிறுன். நான் கிருத கிருத்தியனுயிருந்தபோதிலும் வாரீர் பிர்ம்ம நிஷ்டரே பக்தாளுக்கு ஹிதத்தைப்பண்ணவேணுமென்கிற இச்சையால் யென்னுடைய இச்சையினுல் லீலையினுல் நாநாவிதமான ஜன்மத்தை பரிகரிக்கிறேன். ஓய் விப்பிரநேத்திரரே உம்முடைய பக்தியினுலும் இந்த தோத்திரத்தினுலும் விசேஷமாய் பிரீதனுகிவிட்டேன். ஆகையால் உமக்கு வேண்டும் வரங்களைக்கொடுப்பதாய் சித்தனுயிருக்கிறேன். சங்கையில்லாமல் வேண்டிய வரத்தைக்கேட்டுக்கொள்ளும்.

பிருகுவின் வாக்கியம்.

அதன் பிறகு மேதாவிரிஷியும் விசாலமான நேத்திரத்தோடு கூடிய அந்த ஸ்ரீதேவியோடும் சங்கர்ஷுதி தேவர்களோடுங்கூடிய அந்த வாசுதேவனுல் சொல்லப்பட்ட வாக்கியத்தைக்கேட்டு பிரீதியால் மலர்ந்து விஸ்தாரமாயிருக்கிற நேத்திரத்தையுடைய அந்த பகவானுடைய முகாம்புஜத்தைப்பாரா நின்றுகொண்டு தழதழத்த வாக்காலே மெள்ள அந்த ஹரியைப்பார்த்து விக்ஞாபனம் செய்தார்.

மேதாவியின் வாக்கியம்.

வாரீர் ஹரியே யென்னுடைய அந்தராத்துமாவானது உம்முடைய தர்சனமாகிற சுதையை அநேககோடி கற்பங்களாலே

பானம் பண்ணினபோதிலும் மனத்திருப்தியை யடைகிறதில்லே. உம்முடைய தர்சனமாகிற சுதாம்புதியில் மூழ்கி சுகித்திருக்கிற வெனதாத்மாவுக்கு பிர்ம்மாதிகளுடைய சுகங்களும் மிகவுமற்பங்களாக ஆகின்றன. வாரீர் தேவனே நான் பண்ணிய தபசுக்கு பலமாகக்கிடைத்த உமது இத்தர்சனத்தைத்தவிர வேறு எந்த வரத்தை நான் கேட்கப்போகிறேன்.

பிருகுவின் வாக்கியம்.

ஓய் சௌநகரே அப்பால் அந்த பகவானும் தன்னுடைய கடாக்ஷமாகிற அமிர்த வருஷத்தால் அந்த மேதாவிரிஷியை அபிஷேகம் பண்ணிவைக்கிறவர்போல மலர்ந்தவிருகண்களாகிற வம்புயத்தையுடையவராய்க்கொண்டு ஒரு வார்த்தை யருளிச்செய்தார்.

பகவான் வாக்கியம்.

வாரீர் முநிசத்தமரே உம்முடைய தவத்துக்குப்பலன் எனது தர்சனத்தைக்காட்டிலும் வேறு கிடையாதென்று நீர் சொன்னது உண்மையான வாக்கியந்தான். ஓய் மகாமுநியே இந்த லெட்சுமியானவள் உம்மால் புத்திரியாக அபிமாணிக்கப்பட்டு யாதொரு காரணத்தால் விர்த்தி செய்யப்பட்டாளோ அந்தக்காரணத்தால் நானுமக்கு பந்துவாக ஆகிவிட்டேன். வாரீர் நல்ல விருதத்தோடு கூடினவரே யாதொரு காரணத்தால் உமக்கு வரம் கொடுப்பதாக நான் வந்திருக்கிறேனே ஆகையால் யாதொரு வரங்களை நீர் அபேக்ஷித்து கேட்கிறீரோ அந்த வரங்களைக் கொடுக்கிறேன் வாங்கிக்கொள்ளும் என்று இவ்விதமாய் அந்த வாசுதேவனால் சொல்லப்பட்ட அந்த மேதாவி முநியானவர் அந்தபகவானை பூமியிலே தடிபோல் விழுந்து பிரணாமஞ்செய்து மூன்று வரங்களை யாசித்தார்.

மேதாவியின் வாக்கியம்.

வாரீர் தேவ தேவேசனே இமைப்பொழுதும் விட்டுப்பிரியாமலும்மிடத்தில் நித்தியவாசஞ் செய்கிற இந்த ஸ்ரீதேவியோடும் சங்கருஷணாதிகள் நால்வர்களோடும் தேவரீர் இந்த ஸ்ரீநிவாச

க்ஷேத்திரத்தில் சதா சாந்நித்தியத்தை பண்ணவேணும். வாரீர் ஸ்ரீபதியே இந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் ஸ்ரீதேவியானவள் சர்வ சுவாதீனத்தோடுங்கூடி சுதந்தரயாயிருந்துகொண்டு அவளுக்கு நீர் பரதந்திரராய் அவளது ஆக்ஞையில் நீரிருந்துகொண்டிருக்கவேணும். வாரீர் புருஷோத்தமரே அகில தோஷங்களுக்கும் ஸ்தானமாயிருக்கிற நான் இப்போது மகாலெட்சுமியோடுங் கூடியவும்மை சரணமடைந்திருப்பதால் உமக்கு ஸ்தானமாகிய வைகுண்டபதவியை எனக்கு கிருபை செய்தருளவேணும். இந்த மூன்று வரத்தையும் எனக்கு தந்தருளவேணுமென்று இவ்விதமாய் அந்த பகவானை தண்டம் சமர்ப்பித்து விஞ்ஞாபனம் செய்தவம்முனியைப்பார்த்து பகவானனவர் புன்முறுவலோடுகூடிய முகாம்புயத்தோடு கூடினவராயும் மறுபடியும் ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

பகவான் வாக்கியம்.

வாரீர் தபோநிதியே இந்த க்ஷேத்திரத்தை சுவயம் வியக்தமான ஸ்ரீநிவாச க்ஷேத்திரமென்று அறியும் ஓய் தோஷமில்லாதவரே பராவரேசயாயிருக்கிற என்னுடைய சக்தியான லட்சுமியோடேகூட இந்த க்ஷேத்திரத்தில் சர்வகாலங்களிலேயும் எப்போதும் நான் சந்நிதிபண்ணிக்கொண்டிருக்கிறேன். ஓய் முநியே இந்த க்ஷேத்திரம் பென்னுடைய மாயையால் ஒருக்கால் தோற்றுகிறதும் மற்றொருக்கால் மறைகிறதுமாக யிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் லட்சுமியின் ஆக்ஞையினால் அந்த லட்சுமிக்கு சுதந்தரமும் நானவளுக்கு பரதந்தரனு யிருக்கையுமானது அநாதியாகவே யேற்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் வசிப்பவர்களெவ்விதமான பாபத்தையுடையவர்களாயிருந்தபோதும் அவர்கள் சித்தமாக முக்தியை அடைகிறார்கள். இதில் சந்தேகமில்லை.

பிருகுவின் வாக்கியம்.

வாரீர் சௌநகரே பகவான் இவ்விதமாய் அந்த மேதாவி ரிஷியின் பொருட்டு வரத்தைக்கொடுத்து இந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் அற்புதமானவைந்து கிருத்தியத்தோடு கூடியும் ஐந்து சிகரத்தோடு கூடியுமிருக்கிற ஸ்ரீநிவாசமென்கிற விமானத்தைத்

தன்னுடைய சங்கற்பத்தாற்றேற்றிவைத்து அந்த விமானத்தில் அநபாட்டிநியாய் தனது சக்தியாயுமிருக்கிற லட்சுமியோடும் தனக்கு அனுரூபமாயிருக்கிற சங்கருஷணுதி நான்கு மூர்த்திகளோடுங்கூடி அந்த வாசுதேவனுனவர் சர்வலோகங்களுக்கும் ஹிதத்தின்பொருட்டு பக்தாளுக்கு ஹிதத்தைப்பண்ணவேணுமென்கிற இச்சையால் சௌந்தரியசாரமேயோர்வடிவாய்த்திரண்டு வந்ததுபோல் சர்வாவயவ சுந்தரமான அர்ச்சாரூபத்தைத்தரித்து அந்த க்ஷேத்திரத்தில் இன்னமும் காணப்படுகிறார்.

ஷை பிர்ம்மாண்ட புராணத்தில் உத்தரபாகத்தில் பிருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாச மாகாத்துமியத்தில் ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இதன் ஏழாவது அத்தியாயத்தால் லட்சுமியோடேங்கூட பகவான் ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் ஆவிர்ப்பவித்ததைத் தனது மகிஷிகளாகிய சாவித்திரி சரசுவதிகளாற் கேட்டு அந்த பகவானை இந்த க்ஷேத்திரத்தில் ஆராதிக்கக்கருதி வந்து பகவானைத் துதித்து அந்த பகவானுடைய அருளால் அந்த பிர்ம்மாவும் பகவானை ஆராதித்து பிர்ம்மோத்ஸவம் முதலான உத்ஸவங்களை நடத்திவைத்தாரென்று சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

எப்போது ஜகத்பதியாயிருக்கிற வாசுதேவனுனவர் லெட்சுமியோடு கூடினுரோ அப்போது சராசரமான இந்த ஜகமானது நல்ல காந்தியோடுகூடிப் பிரகாசத்தை யடைந்தது. தேவதைகளும் பிரபாவம் சக்தி பலமிதுகளோடு கூடினவர்களாய் தைத்தியாள் தானவாள் இவர்களை யெல்லாம் ஜயித்து மனோதுக்கத்தை விட்டவர்களானுர்கள். அப்போது மகாபாக்கியவதிகளாயும் சுபமான முகாரவிந்தத்தை உடையவர்களுமாகிய சாசுவதி சாவித்திரி யென்கிற இரண்டு தேவிகளும் சத்தியலோகம்போய் தங்களுடைய பர்த்தாவாகிய பிர்ம்மாவினிடத்தில் ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் மகாலெட்சுமியினுடைய ஆவிர்ப்பவத்தை அறி

வித்தார்கள். அந்த பாமேட்டியும் அவர்கள் வார்த்தையைக் கேட்டுப்பிரீதியினால் மலர்ந்த கண்களோடு ஆச்சரியத்தால் நிறைந்த மனதோடுங்கூடினவராய்க்கொண்டு மனதில் ஒருவித மான சிந்தையைப்பண்ணினர். அதாவது அந்தப் பதுமபூவானர் சர்வபூதநாதனுயும் சநாதனராயும் இருக்கிற அந்த விஷ்ணுவான வரும் சர்வலோகேசுவரியாயுமிருக்கிற அந்த மகாலட்சுமியும் எனக்கும் நாதன்தான். யாதொரு லட்சுமியினுடைய சக்தி லேசத்தால் சராசரமாயிருக்கிற இந்த சகல ஜகத்தும் மிகவும் பலத்தோடும் சோபையோடும்கூடி பிரகாசிக்கிறதோயாதொருத்தி யினுடைய கடாக்ஷலேசத்தால் நானும் இந்திராதிகளாயிருக்கிற சகல தேவதைகளும் கிரமமாக இந்த பதங்களை யனுபவிக்கி ரோமோ அந்த மகாலட்சுமியோடும் சங்கருஷணுதி தேவர்களோ டுங்கூடி இந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் நித்திய சாந்நிந்தியம் பண்ணிக்கொண்டிருக்கிற ஹரியை அர்ச்சிக்கக்கடவேனென்று சிந்தைசெய்து அந்த பத்மயோகியான பிதாமகனுனவர் அந்த சாவித்திரி, சரசுவதியென்கிற இரண்டு தனது மகிஷிகளோடு ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தை யடைந்து ஸ்ரீநிவாச விமானத்தில் விஷ்வக்சேநரால் றிவிக்கப்பட்டு கிரீடரெத்ன காந்திகளாலே ஆலத்தி வழிக்கப்பட்டிருக்கிற திகந்தரத்தையுடையவராயும் குடில மாயும் மழமழவென்றும் வாசனையோடு கூடியுமிருக்கிற தலைமயிர் களாகிற வண்டினங்களால் மொய்க்கப்பட்டு விளங்காநிற்கிற முக பங்கயத்தையுடையவராயும் எட்டாம்பிறை சந்திரனை அவமதி செய்யும் நெத்திக்கட்டையுடையவராயும் ஆழங்கண்ட ஜலத்திலு ண்டானதாயும் சரத்காலத்திலுண்டானதாயுமிருக்கிற மகரகுண்ட லங்களுடைய காந்திகளாலே அலங்கரிக்கப்பட்டவராயும் நாசிக தண்டத்தால் மோரப்பட்டத் தனது முகாரவிந்த வாசனையின் சமிர்த்தியையுடையவராயும் ஒரு காரணமன்றியில் செய்யப்பட்ட மனோகரமான புன்முறுவலின் காந்தியினால் விளங்குகிறவராயும் தேகசௌந்தர்யமாகிற அமிர்தப்பிரவாகத்தில் மூன்று ரேகை யோடுகூடின சங்கம்போல் விளங்குகிற கழுத்தையுடையவராயும் கற்பகத்தருவின் கிளைகள்போலிருக்கிறவிரண்டு கைகளாலே விளங்குகிறவராயும் லட்சுமி தேவியானவள் சுவேச்சையினால் விளையாடுகைக்கு அமைத்த விசாலமான அங்கணம் போன்ற திரு மார்பை உடையவராயும் அசேஷ ஜெகத்துக்கும் ஆதாரமாய்

நெருங்கி இருக்கிற உதிரபந்தத்தையுடையவராயும் இடையின் வாசத்தால் மனோகரமாயிருக்கிற திவ்விய பீதாம்பரத்தால் விளங்குகிறவராயும் இரண்டு துடைகளின் காந்திகளினாலாக்கிரமிக்கப்பட்ட இளம் வாழை மரம் கையின் கரபமென்கிற பாதேசமிதிகளின் காந்திகளையுடையவராயும் கங்கையென்கிற இரண்டு ஆடுசதைகளால் ஜயிக்கப்பட்டிருக்கிற மனமதனம்புறைகளுடைய சௌந்தரிய சம்பத்தை உடையவராயும் சங்க சக்கரத்தை பத்மம் வச்சிரம் முதலான ரேகைகளோடுகூடி பாதாம்புயத்தையுடையவராயும் சங்கு சக்கராயுதங்களைத்தரித்தவராயும் பூர்ணராயும் புண்டரீகம் போன்று நீண்டவிருகண்களையுடையவராயும் சர்வபூதங்களுக்கும் ஆச்சிரயராயும் சர்வாபரணங்களால் பூஷிக்கப்பட்டவராயும் ஸ்ரீ தேவியோடும் சங்கருஷணாதி மூர்த்திகளோடும் கூடியவராயும் ஜகந்நாதராயுமிருக்கிற பரிபூர்ணமான அந்த வாசுதேவ பகவானை ஸ்ரீநிவாச பகவானை தருசனம் பண்ணி ஜகத்தாதாவான அந்த பிர்ம்மா தோத்திரம் செய்யவாரம்பித்தார்.

பிர்ம்மாவின் துதி.

வாசுதேவராயும் பரமாத்துமாவாயும் சர்வ காலத்திலும் ஆநந்தரூபியாயும் இருக்கிற பரமபுருஷனை உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். ஸ்தூல ரூபியாயும் சூக்கும ரூபியாயும் அமூர்த்தியாயுமிருக்கிற உமக்கு பிரணமம் பண்ணுகிறேன். யாதொருவருக்கு நாமரூபங்கள் கிடையாதோ யாதொருவர் இருக்கிறார் என்கிற ஒரு சப்தத்தாலே மாத்திரம் விளங்குகிறாரோ யாதொருவர் ஞானிகளாலே நித்தியமாய் காணப்படுகிறாரோ அந்த பரமாத்துமாவான உமக்கு நமஸ்காரம். ஆயிரந்தலைகளோடும் ஆயிரம் புஜங்களோடும் ஆயிரம் பாதங்களோடும் அநேகமூர்த்திகளோடும் விளங்குகிற பரமாத்துமாவான உமக்கு நமஸ்காரம். பராவரமயியான சக்தியாயும் தூலாதூலரூபிணியாயும் பகவதியாயும் யாதொரு தேவி இருக்கிறாளோ அந்த ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம். யாதொருத்தி பத்மத்தை ஆலயமாயுடையவளாயும் பத்மத்தை லீலையாக இரண்டு கைகளிலும் தரிப்பவளாயும் பத்மம்போல் நேத்திரத்தையுடையவளாயும் பத்மாசநியாயுமிருக்கிறாளோ பத்மினியென்கிற அந்த ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம்செய்கிறேன்.

சச்சிதானந்தரூபிணியாயும்சத்தாமாத்திரசுரூபிணியாயும் ஜகத்தை வியாபித்தவளாயும் யாதொருத்தியிருக்கிறளோ அந்த ஜெகன் மாதாவான ஸ்ரீதேவிக்கு நமஸ்காரம். இந்த ஸ்ரீநிவாச விமானத் தில் ஸ்ரீயோடும் சங்கருஷணுதிகளோடும்கூடி நிலையா நின்று கொண்டிருக்கிற புண்டரீகம் போன்ற நேத்திரத்தையுடைய அந்த பூர்ணனை நான் பஜிக்கிறேன்.

பிருகுவின் வாக்கியம்.

பிரும்மாவினுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட ஹரியானவர் புன்னகையுடன் விசேஷமான காந்தியோடுகூடிய ப்ரும்மாவைப் பார்த்து பின்வருமாறு சொன்னர்.

"ஹே பத்மோத்பவா! உன்னுடைய ஸ்தோத்திரத்தினுல் நான் மிகவும் சந்தோஷமடைந்து ப்ரஸன்னனுகிறேன். உனக்கு அபிப்பிராயமான வரத்தைக்கேட்பாயாக"

பிருகுவின் வாக்கியம்.

இவ்விதமாக பகவானுடைய வாக்கியத்தைக்கேட்டு அஞ்ஜலி யுடன் சொல்லுகிருர் பிரும்மா.

பிரும்மாவின் வாக்கியம்.

ஸ்ரீ தேவியுடனும் ஸங்கருஷணுதிகளுடனும் ஸ்ரீநிவாச க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கிற ப்ரபோ! புருஷோத்தமா! நான் உம்மை ஆராதிப்பதற்கு ஆசைப்படுகிறேன். உத்தமமான இந்த வரத்தை எனக்கு அனுக்கிரகிக்கவேண்டும். ஜலமந்திராதி களாலே நான் அர்ச்சிக்கிறேன். என்று சொல்லிக்கொண்டு தண்டம் ஸமர்ப்பித்தார்.

பிருகுவின் வாக்கியம்.

ஜகந்நாதனுயும் ப்ரணதார்த்திஹரனுயும் இருக்கிற பகவான் பிரும்மாவை பூமியில் நின்றும் எழுப்பி புன்னகையுடனும் கம்பீர மான வார்த்தைகளைச்சொன்னர்.

பகவான் வாக்கியம்.

நான் முன்பு உன்னைப்போன்ற எத்தனையோ பிரும்மாக்களால் இஷ்ட சித்தியின் பொருட்டு அர்ச்சிக்கப்பட்டிருக்கிறேன். இந்த க்ஷேத்திரத்தில் இஷ்டசித்தியின் பொருட்டு துவாதசாக்ஷர மந்திரத்தினால் என்னை அர்ச்சனை பண்ணு. எந்த பக்தன் என்னை துவாதசாக்ஷரங்களால் பக்தியுடன் பஜிக்கிறார்களோ அவர்கள் ஸம்ஸார பந்தத்தில் நின்றும் விடுபட்டு என்னுடைய லோகத்தை அடைகிறார்கள். துவாதசாக்ஷரமந்திர ஜபத்தினால் ஒரு க்ஷணம் ஜபித்தாலும் அந்த க்ஷணத்திலேயே அவனை நான் ஆதரிக்கிறேன். துவாதசாக்ஷர மந்திரத்தில்ஸமர்த்தர்களான என்னுடைய பக்தர்களுக்கு விசேஷமாக மோக்ஷமென்பது நிச்சயம். பின்னும் ஸர்வசம்பத்துக்களும் உண்டாகும். ஹே! பிரும்மாவே! இந்த மனுவினாலேயும் பிரும்மாக்களாலேயும் நான் தினமும் அர்ச்சிக்கப்பட்டிருக்கிறேன். இவ்விதமாக ஆக்ஞாபிக்கப்பட்டவராய்க் கொண்டு பிரும்மாவானவர் ஸ்ரீனிவாஸ க்ஷேத்திரத்தில் வாஸம் செய்துகொண்டு துவாதசாக்ஷர வித்யையினாலும் பூர்ணமாக ஆராதித்துக்கொண்டும் ஸ்ரீனிவாஸனுக்கு உத்ஸவத்தை விதிப்படி செய்தார், இந்திரன் முதலிய தேவர்களுடன், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், யக்ஷர்கள், கிந்நரர்கள், சித்தர்கள், இன்னும் இதர தேவதைகளுடனும் உத்ஸவத்தை செய்து தனுர்மாஸம் சுக்லபக்ஷ துவாதசி திதியில் அவபிருதம் செய்தார். இந்தமாதிரியாக பத்மயோகியாறை பிரும்மாவினாலேயே ஆராதிக்கப்பட்டவராய்கொண்டு ஸ்ரீனிவாஸ க்ஷேத்திரத்தில் ஸாக்ஷாத் ஹரியானவர் இன்றைக்கும் ஸர்வர்களாலேயும் தர்சிக்கப்படுகிறார்.

பிரும்மாண்ட புராணத்தில் உத்ரபாகத்தில் ப்ருகுசௌனக ஸம்வாதத்தில் ஸ்ரீனிவாஸ மாகாத்மியத்தில் 7-வது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம.

(இந்த எட்டாவது அத்தியாயத்தால் தாம்ராக்ஷன் என்கிற செங்கண்ணன்சோழன் அடைந்த பலனையும் அவன் செய்த உத்ஸவாதிகளைப்பற்றியும் சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

வைவஸ்வத மண்டலத்தின் மத்தியில் சோழமண்டலத்தில் முன்காலத்தில் மூன்று லோகங்களிலும் பிரசித்திபெற்ற தாம் ராக்ஷனென்ற (செங்கணன் சோழன்) பெயர்கொண்ட ராஜா ஒருவன் இருந்தான். அவன் சத்தியவாதியாயும், தர்மாத்துமாவாயும், நன்றி மறவாதவனயும், புண்ணிய புருஷனயும், தயாளுவாயும் சத்தியசந்தனயும் பொறுமை உடையவனயும், ஒருவித தோஷமும் இல்லாதவனயும் வேத வேதாங்களுடைய தத்துவங்களை யறிந்தவனயும் தனுர் வேதத்தில்சமர்த்தனயும் சர்வஜனங்களுக்கும் பிரியத்தை சொல்லுகிறவனயும் ராஜநீதியில் சமர்த்தனயும் தன்னுடைய சகலமான மித்திரரை ரக்ஷிப்பவனயும் சமஸ்தாளாயிருக்கிற சத்ருக்களை சம்ஹாரம் செய்பவனயும் தேஜஸையுடையவனயும் தைரியத்தையுடையவனயும் வீரனயும் விஜயத்தை யுடையவனயும் பராக்கிரமத்தால் விளங்குகிறவனயும் கோபத்தில் எமனுக்கு சமனயும் பிரதாபத்தில் அக்கினிக்குச்சமனயும் புண்ணியாவான்களாலே எடுத்துச் சொல்லத்தக்க குணங்களையுடையவனயும் நாராயண பரனயும் மூன்று லோகங்களிலும் செங்கணன் சோழனென்று பிரசித்தனயும் இருக்கிற சோளராஜனிருந்தான். ராஜாக்களுக்குள் உத்தமனயிருக்கிற அந்த செங்கணன் சோழனவன் ஒரு காலத்தில் கயாசிரார்த்தம் பண்ணவேணுமென்று இச்சையையுடையவனய்க் கொண்டு அல்ப்ப சேனைகளோடு கூடினவனய் தன்பத்னியோடுங் கூட கயைக்குப்போயிருக்கும் சமயத்தில் அவனுடைய ராஜ்ஜியமானது சத்துரு ராஜாக்களால் அபகரிக்கப்பட்டுவிட்டது. அவனும் கயாக்ஷேத்திரத்தை அடைந்து விதிபிசகாமல் ஸ்நானம் செய்து பக்கத்தில் புத்தியைச்செலுத்தாமல் நாராயணனை அர்ச்சித்து ஓய் விப்பரரே! மஹாமதியாயிருக்கிறவனும் விதி பிசகாமல் சிரார்த்தத்தைபண்ணினன். அந்த கயாவிலே தன் பித்துருக்களுயுத்தேசித்து வேத வேதாந்தங்களை கரையறிந்திருக்கிற பிராம்மணளை போஜனம் செய்வித்து அந்த பிராமணனுக்கு அளவில்லாத தனங்களைக்கொடுத்து அத்தியந்தம் தார்மிகனன அந்த ராஜா பத்னியோடுங்கூடத்திரும்பித் தனது தேசம் வந்து சத்துருக்களாலபகரிக்கப்பட்ட தன் ராஜ்ஜியத்தைப்பார்த்து அதிவீரா

ளான சத்துருக்களைக் கொல்ல வல்லமையுடையவனும் ஒரு ரதத்தில் ஏறி தானொருவனாய் கடுமையாயுத்தஞ்செய்து அதிக சேனைகளோடு கொழுப்படைந்த எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டவனாய் ஆயுதங்களையுங் குதிரை தேர்களையும் இழந்தவனாய் மிகவும் களைத்துத் தன்னால் முடியாமல் தன் தர்மபத்னியோடுங்கூட காட்டிற் சிலநாள் சஞ்சரித்து கஷ்டத்தை அடைந்து பசிதாகங்களோடு கூடி மிகவும் சிரமத்தாலாதுரனாய்க்கொண்டு தெய்வாதீனமாய் இந்த சுகந்த வனத்தில் ஸ்ரீநிவாச க்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். ஓய் பிர்ம்ம நிஷ்டரே அங்குள்ள மகாமுநிகள் இவ்விதமாய் கஷ்டத்தையடைந்து வந்திருக்கிற செங்கணான் சோழராஜாவைப் பார்த்து மிகவும் கிருபை கூர்ந்து ஆதித்தியஞ்செய்து போஜனம் செய்து வைத்து மகாத்மாக்களான அந்த முநிகள் அவ்வரசனைப் பார்த்து வாரீர்ராஜனே ஜன்மாந்தரத்தில் பண்ணினபாக்கிய விசேஷத்தால் நீர் சித்தி க்ஷேத்திரமாகிய உத்தமமான இந்த ஸ்ரீநிவாச க்ஷேத்திரம் வந்து சேர்ந்தீர். இந்த க்ஷேத்திரத்தில் மணிமுத்தா நதியின் தென்கரையில் சநாதனனான வாசுதேவனானவர் லட்சுமியோடும் சங்கருஷணாதி மூர்த்திகளோடும் பக்தாபீஷ்டங்களை கொடுத்துக்கொண்டு சதா சந்நிதி பண்ணிக்கொண்டு அர்ச்சாரூபியாயெழுந்தருளி இருக்கிறார். லட்சமியோடுங்கூடிய அந்த ஜெகத்பதியை நீர் சரணம் புகுந்து பிரார்த்தியும். அபீஷ்டதானத்தை பக்தாளுக்கு கொடுப்பவரான அந்த பூர்ணனை லட்சுமீபதியின் அருளால் உமக்கு ராஜ்ஜியசித்தி மறுபடியுமுண்டாய் விடுமென்று சொன்னார்கள். அவ்விதமாய் அந்த மகாரிஷிகளால் சொல்லப்பட்ட அந்த ராஜாவானவன் மணிமுத்தாநதிதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து மனோஜெயத்தையுடையவனாய்க்கொண்டு பத்நியோடுங்கூட பரிசுத்தமாயும் பத்மஜனாலே யர்ச்சிக்கப்பட்டுமிருக்கிற இந்த ஸ்ரீநிவாச விமானத்திலே பூர்ணசந்திரன்போல முகத்தையுடையவராயும் புண்டரீகம்போன்ற நேத்[illegible]களை உடையவராயும் தயாநிதியாயும் ஸ்ரீதேவியோடும் சங்கருஷணாதி மூர்த்திகளோடும் நிலையாக நிற்பவராயும் விசுவேசனாயும் சர்வலோக மஹேசுவராயும் பரிபூர்ணனென்று நாமதேயத்தையுடைய அந்த ஸ்ரீநிவாசேசுவரனை நேத்திரங்களாலே தர்சனம் பண்ணி சிரசால் பூமியில் விழுந்து பிரணாமஞ்செய்து ஸ்ரீகாந்தனாயும் சுவர்ணமயமான ஸ்ரீநிவாஸ விமானத்தில் வசிப்பவராயும் பூர்ணனாயும் ஆதிபுருஷனாயும் புண்ட-

ரீகம் போன்ற நேத்திரத்தையுடையவராயும் வாசுதேவராயும் சங்கருஷணராயும் பிரத்யும்நனுயும் அநிருத்தராயும் சாம்பவனென்று நாமதேயத்தையுடையவராயும் தன்னையாசசிரயித்தவர்களை நழுவவிடாதவராயும் விஷ்ணுவாயும் சர்வாத்துமாவாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். யாதொருத்தியானவள் சர்வ சக்திகளுக்கும் நாயகியாயும் மூலகாரணியாயும் ஸ்ரீநிவாசநியாயுமிருக்கிருளோ அந்த ஸ்ரீதேவியின் பொருட்டு நமஸ்காரம். வாரீர் ஸ்ரீநிவாசேசுவரரே ஸ்ரீசரே ஸ்ரீநிவாசனே தயாநிதியே தேவனே ஈசனே பூர்ணனே அகதிகளாய் உம்மை சரணம் புக்கவனுயிருக்கிற யென்னை ரக்ஷிக்கக்கடவீர் என்று துதித்து விஞ்ஞாபனம் பண்ணினுன்.

பிருகுவின் வாக்கியம்.

இவ்விதமாய் ராஜாவினுல் துதிக்கப்பட்டவராய் ஸ்ரீமானுய் ஸ்ரீநிவாசேசுவரராயிருக்கிற கருணைக்கடலான அந்தஹரியானவர் தீனனுன அந்த ராஜாவைப்பார்த்து தயையால் திருப்பவளச் சோதிவாய் திறந்து பிரத்தியக்ஷமாய் ஒரு வார்த்தை சொன்னுர்.

பகவான் வாக்கியம்.

வாராய் நரபதியே நானுன்னுடைய விருத்தாந்தம் முழுமையுமறிவேன். உன்னுடைய இந்த தோத்திரத்தாலும் பக்தியினுலும் சந்துஷ்டனுய்விட்டேன். வாராய் திருடவிருதனுயும் அரிநிதனனுயுமிருக்கிற ராஜேந்திரனே உனக்கு அபயந்தந்தேன். உன் ராஜ்ஜியத்தை நான் உனக்குக் கொடுத்தேன். என்னுல் சர்வ சம்பத்துங் கொடுக்கப்பட்டது. நிர்மலமாயும் பாபத்தைப்போக்குவதாயும் இருக்கிற மணிமுத்தாநதி தீர்த்தத்திலே ஸ்நானத்தைப் பண்ணு. அந்த நதியிலுனக்கு திவ்யமான கத்தியை கொடுக்கிறேன். என்னுடைய பிரபா[illegible]த்தால் சத்துருக்களைப்பிளக்க வல்லமையுடைய அந்த கத்தியை எடுத்து சத்துருக்களை வெல் என்றுர். அப்படியே கிரஹித்துக்கொண்டு அந்த தீர்த்தத்திலிருந்து கரையேறினுர். அதே சமயத்தில் சிரேஷ்டமான ஒரு குதிரை தெய்வாதீனமாக வர அதன்பேரில் அவ்வரசன் தயாநிதியான ஸ்ரீநிவாசனை மனதில் தியானித்து சிரஸில் அஞ்ஜலி பண்ணிக்கொண்டு தன்னுடைய சத்துருவைக்கொல்ல இச்சித்தவனுய்

ஏறினன். அவன் அக்குதிரைமீது ஏறி அதிவேகமாகச்சென்று தன்சத்துருக்களைப்போருக்கு அழைத்தான். இருதிறத்தாருக்கும் மயிர்க்கூச்செறியும்படியான யுத்தம் நடந்தது. அந்தயுத்தமானது தேவசத்துருக்களுக்கும் இந்திரனுக்கும் நடந்ததுபோல் இருந்தது. தாம்ராக்ஷனை வீரனாலே யுத்தத்திலே எதிர்த்த சத்துருக்களுடைய பலத்தை ஜயித்து ராஜ்யத்தையும் அடைந்தான்.

அதன் பிறகு ஸ்ரீநிவாஸனுடைய சமீபத்தை அடைந்து அவருக்கு தன் பாதி ராஜ்ஜியத்தையும் ரத்தின கோசங்களையும் கொடுத்து உத்ஸவத்தை செய்வித்தார். இந்த பூர்ணனுடைய உத்ஸவ சேவார்த்தமாக நாரதாதிகள், இந்திராதி தேவதைகள் கந்தர்வ அப்ஸரஸ்கணங்கள் முதலியவர்கள் வந்து துந்துபி வாத்யம் கானம், நர்த்தனம், புஷ்பவர்ஷம் முதலியவைகளைச் செய்தார்கள். அவர்களுக்கு நிவாஸஸ்தானம், அன்னசாலை, தீர்த்தசாலைமுதலிய இடங்கள் அந்த அரசன் செய்வித்தான்.

பிறகு மணிமுக்தா நதியில்பத்தினியுடன் ஸ்நானம்செய்து துவாதசாக்ஷர மந்திரத்தினாலும் அனேகவிதமான வாஸனையுள்ள தான புஷ்பங்களாலும், கர்ப்பூர சந்தன கஸ்தூரி குங்குமங்களாலும் அர்ச்சித்தான். பக்ஷ்ய போஜ்ய பாயஸ பலங்களையும் நிவேதனம் செய்வித்தான். அனேகவிதமான ஸ்தோத்திரங்களையும் செய்து நான்கு தடவை பிரதக்ஷணம்செய்து ஸேவித்தான்.

இவ்விதமாக ஒன்பது நாள் உத்ஸவத்தைச்செய்து வைசாக மாதம் சுக்கில பக்ஷம் பௌர்ணமி திதியில் மணிமுத்தாநதி தீர்த்தத்தில் அவபிருத உத்ஸவம்செய்து தன் பத்தினியுடன் சந்தோஷத்தை அடைந்தான்.

பிரும்மாண்ட புராணத்தில் உத்தரபாகத்தில் ப்ருகு சௌநக சம்வாதத்தில் ஸ்ரீநிவாஸ மாகாத்மியத்தில் 8-வது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இந்த ஒன்பதாவது அத்தியாயத்தால் செங்கணன் கோச் சோழன் முன்னால் சொல்லப்பட்ட பிரகாரம் உத்ஸவாதிகளைச் செய்து, மண்டபம் முதலிய கைங்கரியங்களைச்செய்து புஷ்கர க்ஷேத்திரத்திற்குத் தவஸு செய்யும் நிமித்தம் சென்ற சமயத்தில் நாரதரை சந்தித்து ஸ்ரீநிவாஸ க்ஷேத்திர மாகாத்மியத்தைக்கூறி, அந்த க்ஷேத்திரத்தில் வஸித்து பக்தியோகம் செய்தால் முக்தியடையலாம் என்று நாரதரால் சொல்லப்பட்டதை இதில் சொல்லப்படுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

(நாரதர் சொல்வது)

வாரீர் பிராமணோத்தமரே! பிறகு அந்த ஸ்ரீமானான செங்கணன்சோழன் ஐந்து சிகரங்களோடுகூடியவும் ஐந்து சக்திகளோடு கூடியவுமான தங்கமயமான விமானத்தைச் செய்து வைத்தார். வாரீர் பிராமணோத்தம! அந்த மகீபதியானவன் மண்டபங்களையும், புதிது புதிதான ஆபரணாதிகளையும், அதிரமணீயமான புஷ்பங்களோடுகூடிய உத்யானவனங்களையும் ஸ்ரீதேவியின் பொருட்டும் ஸ்ரீநிவாசனின் பொருட்டும் செய்துவைத்தான். யாதொரு நரனானவன் அந்த ஸ்ரீயின் பொருட்டும் ஸ்ரீசனின் பொருட்டும் பக்தி புரஸ்ஸரமாக இந்த கந்தாரணியத்தில் ஒரு உத்தமமான புஷ்பத்தினாலே அர்ச்சிக்கிறானோ, அவன் ஸமஸ்த கர்மங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணுலோகத்தையும் அடைகிறான்.

கேதகீ புஷ்ப ஸகஸ்ரங்களாலும், சம்பக புஷ்பங்களாலுமோ துளஸியினாலோ வில்வபத்ரங்களாலோ விபுவான ஸ்ரீநிவாசேசுவரனை துவாதசாக்ஷர வித்யையினாலே ஒருதினமாவது எவன் அர்ச்சிக்கிறானோ அவன் இந்த லோகத்திலேயே போகபோக்கியங்களை அனுபவித்துக் கடைசியில் முக்தியையும் அடைகிறான்.

எவனொருவன் ஹரியாகிற ஸ்ரீநிவாஸனுடைய பரிசுத்தமான ஸகஸ்ரநாமங்களாலே கார்த்திகை மாதத்தில் அர்ச்சிக்கிறானோ அவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபட்டு ஸ்ரீவைகுண்டத்தில் வெகுகாலம் ஸந்தோஷிக்கிறான்.

பிறகு அந்த நரபதியானவன் உக்ரமான தபஸோடுகூடிய ஏழாயிரம் ரிஷிகளோடு கூடவிருந்து கந்தபுரத்தைச் செய்தான்.

அதன் பிறகு அந்த அரசனானவன் விஷயாதிகளிலிருந்து விடுபட்ட ஆசை உடையவனாகி தன்னுடைய கல்மஷமற்ற குமாரனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வித்தான். பிறகு அந்த க்ஷேத்திரத்தில் தானே தபஸையும் செய்தான்.

வாரீர் முனிபுங்கவரே! அவன் ஒரு காலத்தில் கருணாநிதியானவரும் பிரும்ம வித்தையில் ஸமர்த்தரானவரும் புஷ்கரத்தில் தபஸில் இருந்தவரும், ஸ்ரீநிவாஸனை ஸேவிக்கவந்தவருமான நாரதரை அங்கே காணலுற்றான்.

அவ்விடத்திலிருந்த முனிகளுடன்கூட சீக்கிரமாக எழுந்து சென்று, பூமியில் தெண்டம் ஸமர்ப்பித்து ஞான ஸமுத்திரமாகிற மகரிஷியை நல்வரவாகிற விசாரணையை பூர்வகமாகவுள்ள உபசரணையைச் செய்து நியாயமான ஆகாரம் முதலியவைகளால் அர்ச்சித்து பரமப்பிரீதனாக இருந்துகொண்டு சொல்லத்தொடங்கினான்.

அரசன் வாக்கியம்.

வாரீர் பூஜ்யரான நாரதரே! அடியேன் எந்த உபாயத்தினால் தாபத்திரய முகங்களிலிருந்தும், கர்மங்களின் கூட்டங்களாகிற அலைகள் உள்ளதுமான ஸம்ஸாரமாகிற கடலில் நின்றும் வெளிக்கிளம்புவேனோ அப்பேர்ப்பட்ட உயர்ந்த உபாயத்தை தேவரீர் கிருபைசெய்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்.

அந்த புத்திமானான ரிஷியானவர் அமிதமான காந்தியோடு கூடிய அந்த அரசனையும், அந்த இடத்தில் இருக்கிறவர்களானவும் கேட்பதில் பிரீதியுடையவர்களுமான அந்த ஸமஸ்தான ரிஷிகளையும் பார்த்து பதில் கூறினார்.

வாரீர் மகாபாகரே! பகவத் பிரீதியில் நிஷ்டை உடையவர்களுக்கு முக்தியைக்கொடுக்க வல்ல இந்த பக்தியோக விசேஷத்தாலே நிர்விக்கினமான உபாயத்தை, ஏ ராஜேந்திரா! உமக்குச்

சொல்லுகிறேன். கேளும் இது மகா உத்தமமான பக்தியோகம் விரதாதிகளை அனுஷ்டிக்கிற ரிஷிகளாலே சொல்லப்பட்டது. கவனத்துடன் இருந்து கேளுங்கள். வாரீர் மகிபதியே! முதலில் விஷயங்களிலிருந்து மனதை திருப்பிக்கொள். உபாயங்களின்றி விஷயங்கள் நடவா, மகாவிஷ்ணுவுக்கு எது பிரீதியான கதையோ எது என்னால் அத்யானம் செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப் படிக்கவேண்டும். சிறந்த தானஸ்துதியைச் செய்யவேண்டும். குதூகலமாக இருப்பாயேயானால் அவருடைய திவ்ய கதைகளைப் படிக்கவேண்டும், மனோ விருதி இருக்குமேயானால் அந்த பகவானுடைய திவ்ய மங்கள விக்ரகத்தையே ஸேவிக்கவேண்டும். இதர விஷயாதி யோகங்கள், வஸ்திரங்கள், யானை முதலியவைகளி லிருந்து மனதைத் திருப்பவேண்டும். வாரீர்மகாமதியே! முற்கூறி யவைகளில் உமக்கு எவ்வாறு சித்தவிருத்தி இருக்கிறதோ அதைப்பபோலவே இவ்விஷயத்திலும் இருக்கவேண்டும்.

மகாமதியை உடைய எவனொருவன் ஸ்ரீ வாஸுதேவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட பிரஸாதத்தைப் புஜிக்கிறானோ அவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். இதில் சிறிதும் ஸம் சயமில்லை. இந்த பரமரகஸியமான மார்க்கமானது ஸுகபாவத் தையே லக்ஷணமாகவுடையது.

வாரீர் ராஜனே! மகாத்மாக்களானவும் ஸமர்த்தர்களுமான முன்னோர்களாலே அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரியாக தோஷவிவர்ஜிதமான விஷ்ணுபதத்தை வெகுகாலமாகவே ஸ்வயமாகவே சந்தோஷிக்கிறான். இதுமாதிரி யாகவே மாத்ஸரியத்தைவிட்டு விஷ்ணுபக்தனானவன் மனதைத் தன்வசப் படுத்திக்கொண்டு ஸர்வபூதங்களுக்கும் ஹிதத்தை நாடி யமம் நியமம் இவைகளுடன் கூடினவனாய்க்கொண்டு வாரீர் பூபதியே! பத்மாஸனத்தில் ஸுகமாக உட்கார்ந்துகொண்டு பிரா ணயமத்தாலும் வணங்கின றனியோடுகூடியவும், விமலமானவும் சுகமும் பொருந்திய ஹ்ருதயகமலத்தை மலரப்பண்ணிக்கொண்டு இருக்கும் போது ஞானம் என்கிறது நிர்பலமான கொடியாகக் கிளம்புகிறது. அஷ்ட ஐசுவரியங்களாகிறவை ரம்மியமான தளங் களாகக்கூடிக் கொண்டிருக்கிறது. பிரகிருதியானது அந்த

தாமரைக்கு கிஞ்சர்க்கமாகிறது. வித்யை கேஸரங்களாகின்றன. இம்மாதிரி ஹ்ருதயாம்புஜத்தைப் பாவிக்கவேண்டும்.

இம்மாதிரி க்ரமமாக வாரீர் மகாராஜனே! பகவானானவர் அதன்மேல் வீற்றிருப்பதாக மனத்தில் தியானித்துக்கொள்ளும். ரத்னமயமானவும், ப்ரபையோடு ஜொலிக்கின்றவும், மனோரம்மிய மாகவும் இருக்கிற பீடத்தில் அக்கினி, சூர்யன், சந்திரன் இவர்களை நினைத்து ஸனாதனரான ஸ்ரீ வாஸுதேவனை தியானித்துக் கொள்ளவேண்டும்.

ஆயிரம்கோடி சூரியனுக்கு ஒப்பான ப்ரபாவத்தையுடைய வரும், களங்கமற்ற சந்திரனைப் போன்ற தேஜஸ்ஸை உடைய வரும், ப்ரஸன்னமான திருமுகமண்டலமாகிற தாமரையை உடையவரும், ஸ்ரீவத்ஸத்தினாலே (செவ்வை)யாக்கப்பட்ட ஸௌந்தரி யத்தை உடையவரும், பீதாம்பரத்தை உடையவரும், சதுர்புஜங் களால் விளங்குகிறவும், ஸர்வாபரணங்களாலே கூடினவரும், ஸுந்தரமான ஸர்வாவயவங்களையுடையவருமாகிற ஸ்ரீ வாஸு தேவனை இந்தமாதிரியாக நிர்மலமானஹ்ருதயமாகிற தாமரையில் பாவிக்கவேண்டும். ஏ ராஜேந்திரனே! அப்பேர்ப்பட்டவரையே நீ அர்ச்சிக்கவேண்டும். வாராய் நல்ல விரதமுடையவனே அவரையே நீ ஸ்மரிக்கவேண்டும். போய்க்கொண்டிருக்கும் போதும், நிற்கும்போதும், படுக்கையிலும், உட்கார்ந்திருக்கும் போதும் அதே புருடோத்தமனையே, அதே பகவானையே நீ ஸ்மரிக்கவேண்டும்.

பக்தியினாலே எந்த நரனானவன் ஹரியினுடைய அர்ச்சனைக் காக ஆலயத்தைப் பிரவேசிக்கிறானோ அவன் மறுபடியும் ஸம்ஸாரமாகிற குஹாந்தரத்தை நுழைகிறதில்லை. ஏ ராஜனே! வாரீர் ராஜனே! இந்த க்ஷேத்திரமாகிற ஸ்ரீநிவாஸத்தை முக்தி க்ஷேத்திரமென்று அறிவாயாக. பரிபூர்ணமானவராக இருந்தும் இந்த பூர்ணனாகிற பகவான் பக்தர்களுடைய இச்சையில் ஆசை யினாலே இந்த க்ஷேத்திரத்தில் இந்த அகிலத்துக்கெல்லாம் ஈச னானவர் நித்திய வாஸம் பண்ணுகிறார். ஸர்வதேகிகளுக்கெல் லாம் சுலபமாக இருக்கும்படி அப்ராகிருதரூபத்தை தரிக்கிறார். நன்றாக கிட்டக்கூடியவராகவும் நன்றாக சிந்திக்கப்படக் கூடியவரா

கவும் பகவானான ஹரியானவர் நின்ற திருக்கோலமாக விருக்கிறார். ஒரு ஸமயத்திலாவது, சிறிதளவாவது ஈசுவரனாகிற புருஷோத்தமனை எவன் ஸ்மரிக்கிறானோ அவனை அந்த பக்த வத்ஸலனானவர் நித்தியம் நினைக்கிறார். சிறிதளவு ஜலத்தையாவது புஷ்பத்தையாவது பக்தியினாலே எவன் கொடுக்கிறானோ அவனுக்கு அந்த பக்தவத்ஸலனான பகவான் தன்னுடையதான பதத்தையே கொடுத்தருளுகிறார்.

எந்த மகாமதியானவன் ஸ்ரீ வாஸுதேவனின் பொருட்டு தூபத்தை எவனொருவன் ஸமர்ப்பிக்கிறானோ, அவனை ஸம்ஸாரமாகிற துஷ்டமுதலையிடத்திலிருந்தும் யானையைப்போலே (கஜேந்திரனை) விடுவிக்கிறார். ஸ்ரீ வாஸுதேவனுக்கென்று ஸமர்ப்பிக்கப்பட்ட தீபமானது எவ்வளவுக்குள் ஜ்வலிக்கிறதோ அவ்வளவிற்குள்ளே அக்ஞானமாகிற அத்வாந்தத்தை (வழியை) நாசம் செய்யக்கூடிய ஞானமானது ஜொலிக்கஆரம்பிக்கிறது. சிறிதளவாவது போஜ்யபதார்த்தங்களை எவனொருவன் பக்தியினால் பகவானின் பொருட்டு ஸமர்ப்பிக்கிறானோ அவனுக்கு ஸ்ரீ லக்ஷ்மீசனானவர் ஸுகத்தை ஆதியந்தமாக விருத்தி செய்யக்கூடியதை போஜனம் அனுபவிக்கச் செய்விக்கிறார்.

எவனொருவன் ஹரியை பிரதக்ஷிணம் செய்துகொண்டே சபிக்கிறானோ அவன் ஸம்ஸாரமகிற காட்டில் மறுபடியும் சுற்றுகிறதில்லை. சுருதிமனோஹரமான சித்திரலோலனுடைய கதையை எவன் சொல்லுகிறானோ அவனுடைய குலத்தை மட்டுமின்றி அவனையும் கரையேற்றுகிறார். ஸர்வவியாபியான அவர் தாபத்ரயங்களாகிற பெரிய நெருப்பை தணிக்கிறார். கபடமாகவாவது நினைத்தால் வாஸுதேவ பாதாம் புஜத்தை அடைகிறான். போஜனம் நைவேத்யம், விஷ்ணுபாத திருமஞ்சன தீர்த்தத்தை தரித்தல், நிர்மால்யத்தை தரித்தல், விஷ்ணுவினுடையதான இவை ஒவ்வொன்றும் மோக்ஷ ஸாதனமானது. வாராய் மகாராஜனே! இது ஸத்யம், மறுபடியும் ஸத்யம். சந்தேகமில்லை விஷ்ணுவினிடத்தில் பக்தியில்லாமல் முக்தியடைவதற்கு ஒரு போதும் வேறு உபாயமே இல்லை. ஆகவே வாராய்ராஜேந்திரனே! ஸ்ரீநிவாஸாஸேசுவரனாகிற ஹரியை எப்போதும் பஜிப்பாயாக. இந்த க்ஷேத்திர நிவாஸத்தாலே முக்தியானது உனக்கு கையில்

இருக்கிறது. வாராய் மகீபதியே! ஸ்ரீநிவாஸம் என்கிற இந்தப் புண்ணிய க்ஷேத்திரமானது முக்தி க்ஷேத்திரம். எவனொருவன் பக்தியினால் இங்கே வஸிக்கிறானோ அவன் அனுபவிக்கக் கூடிய எல்லா நன்மைகளையும் அடைகிறான்.

பிருகுவின் வாக்கியம்.

ஹே பிரும்மன்னா! அமிதமான காந்தியோடுகூடிய ராஜாவைப்பார்த்து முனியானவர் சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸேசனை ஸேவித்து மறுபடியும் ஆகாசத்திலே சென்றுவிட்டார்.

இந்தமாதிரியாக அரசனானவன் பக்தியோகத்தை அடைந்து, அதனால் பரிசுத்தமான சித்த விருத்தியுடையவனாகவும் சர்வ கர்மங்களில் நின்றும் விடுபட்டு சுத்தனாகி விஷ்ணுவினுடைய பதம் எதுவோ அதை அடைந்தான்.

இது ஸ்ரீ பிரும்மாண்ட புராணத்தில் உத்தரபாகத்தில் ப்ருகு சௌனக ஸம்வாதத்தில் ஸ்ரீநிவாஸமாகாத்மியத்தில் ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இந்த பத்தாவது அத்தியாயத்தால் மணிமுத்தா நதியில் ஸ்னாந பலத்தையும், அங்கு செய்யும் தான பலத்தையும், மார்கழி மாதம் சுக்கிலபக்ஷம் ஏகாதசி விருதமும் துவாதசி விருதமும் அனுஷ்டிக்கவேண்டிய விபரமும் சொல்லப்படுகிறது.)

வாரீர் முனிஸத்தமரே! உம்மால் சொல்லப்பட்ட ஸர்வ பாபத்தையும் போக்கவல்ல ஸ்ரீநிவாஸ மாகாத்மியமானது ஸர்வமும் என்னால்கேட்கப்பட்டது. அதில் சர்வபாபங்களையும் போக்கக்கூடியதான மணிமுத்தாநதி என்கிற தீர்த்தம் இருப்பதைச் சொல்லப்பட்டது. அதனுடைய மகாத்மியத்தைக்கேட்க ஆசையுடையவனாக இருக்கிறேன். தேவதைகளுடைய பெருமையையும் கேட்க ஆசையுடையவனாக இருக்கிறேன். வாரீர் முனிசிரேஷ்டரே! அந்த தீர்த்தத்தில் ஸ்னானகாலத்தில் கொடுக்கக்கூடியது இன்னது என்றும், சிலாக்கியமானவும் ஜபிக்கக்கூடியதுமான மந்திரம் இன்னது என்றும், எந்த இதர தீர்த்தங்கள் இருக்கின்றன

வென்றும் இவைகளைப்பற்றி எல்லாம் உண்மையாகவே கிருபை யினால் எனக்குச்சொல்லியருளல் வேண்டும், ஹே தயாநிதியே.

பிருகுவின் வாக்கியம்.

மணிமுத்தாநதி யென்று உத்தமமான தீர்த்தம் அங்கே இருக்கிறது. அதன் ஸ்மரண மாத்திரத்தினாலே நரனானவன் பாபத்தில் இருந்து விடுபடுகிறான். அதை தெரிசித்தாலும், ஸ்பரிசித்தாலும், பானம் செய்தாலும், ஒரு மனிதனுக்கு மறுஜன்மமென்பது இல்லை. மணிமுத்தாநதி என்று சொல்லிவிட்டு எந்த நரனானவன் அதில் ஸ்னானம் செய்கிறானோ அவன் எல்லா பாபங்களில் நின்றும் விடுபடுகிறான். இதில் ஸம்சயமெதுவும் இல்லை. தினந்தோறும் மணிமுத்தா நதியில் எவனொருவன் ஸ்னானம் செய்கிறானோ அவன் மூன்றுகுலத்தையும் காப்பாற்றுகிறதுமன்றி 21 தலைமுறையும் காக்கிறான். பகவானான பிரும்மாவானவர் அதற்கு ரிஷி. அதன் தேவதை ஸ்ரீயோடுகூடிய வாஸுதேவன். அதன் ரக்ஷகர் விஷ்வக்ஸேனர். மகாலக்ஷ்மியினால் ஸ்தாபிக்கப் பட்ட வில்வ விருக்ஷமானது மனோகரமானது. அதன் நிழல் ஸ்பரிசமாத்திரத்தினாலேயே மானவன் ஸம்பத்தைஅடைகிறான். பத்மயோனியாகிற பிரும்மாவினாலே, ஹே முனிசிரேஷ்டரே, அந்த தீர்த்தக்கரையில் ஸ்தாபிக்கப்பட்ட அசுவத்தவிருக்ஷத்தைப்பற்றி கேட்டாலும் அதைப்பார்த்தாலும் ஸர்வபாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். அதை ஸ்பரித்தாலோ கேட்கவும் வேண்டுமோ?

முன்காலத்தில் மேதாவி மகரிஷியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற வகுளவிருக்ஷத்தை ஒரு மனிதன் தெரிசித்தானேயாகில் அவனுக்கு விசுத்தமானஞானமுண்டாகிறது. அந்த விருட்சத்தின் சாயையில் செய்யும் தானமானது புக்தி முக்தியைக்கொடுக்கிறது. அங்கே சிறிதளவாவது தானத்தைச்செய்தால் அந்த தானத்தினாலே சுகத்தை அடைகிறான். சந்திர சூர்யகிரண காலங்களில் எவன் அந்த மணிமுத்தாநதியில் ஸ்னானம் செய்கிறானோ அவன் வாஜபேயத்தைச் செய்த பலனை அடைகிறான். மணிமுத்தா நதியில் எவனொருவன் மாகஸ்னானம் செய்கிறானே அவன் ஸனாதனமான பிரும்மலோகத்தை அடைகிறான். தினந்தோறும் இந்த தீர்த்தத்தைப்பற்றி கானம் செய்தாலும் பிதிருக்களும் அதேலோகத்தை அடைகிறார்கள்.

புரட்டாசி-மீ அமாவாஸையன்று நமது குலத்தில் பிறந்த எவனொருவன் மணிமுத்தா நதியில் தீர்த்தமாடி கல்மஷங்கள் யாவும் அகன்றவனைக்கொண்டு ஸ்ரீயோடும் ஸங்கர்ஷணாதிகளுடனும் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஸ்ரீநிவாஸனை ஆராதித்து 12 வேதப்ராமணர்களுக்கு போஜனம் செய்வித்து தன்சக்திக்கு அனுஸரித்து தக்ஷிணையும் கொடுக்கிறானோ அந்த சிரேஷ்டமான தீர்த்தத்தில் பிண்டதானமுஞ் செய்கிறானோ அவன் மகா புத்திமான்.

சிரவண நக்ஷத்திரத்தில் எவனொருவன் அந்த தீர்த்தத்தில் தீர்த்தமாடுகிறானோ அவன் அசுவமேதயாகம் செய்தபலனை அடைகிறான்.

எந்த அரசனொருவன் அந்த சிலாக்கியமான தீர்த்தத்தில் தீர்த்தமாடுகிறானோ அந்த அரசனுக்கு யுத்த முகத்தில் ஜயமும் ஐசுவரியமும் அடைகிறான். இதில் ஸம்சயமில்லை. அந்த தீர்த்தத்தில் எந்த கன்னிகை மூன்று மாதம் ஸ்னானம் செய்கிறாளோ அவள் நல்ல பதியை அடைகிறாள். அபுத்திரர்களாக இருக்கிற ஸ்திரிகள் அதில் ஸ்னானம் செய்தால் நல்ல புத்திரர்களை அடைவார்கள். கெட்ட நடவடிக்கையுடையவள் நல்ல நடத்தையுடையவள் ஆவாள். ஒரு கிருஷ்ணாஷ்டமி தினம் அந்த தீர்த்த ஸ்னானம் செய்தால் ஆயிரம் கிருஷ்ணாஷ்டமி தினம் ஸ்னானம் செய்த பலனை ஒரு நரன் அடைகிறான். யாதொரு நரனானவன் 3 மாதம் ஷை தீர்த்தத்தில் விதிப்படி ஸ்னானம் செய்கிறானோ அவன் குஷ்டாதிரோகங்களினின்றும் நிவர்த்தி யடைகிறான். பங்குனி மாதம் பௌர்ணமிதினம் வெள்ளிக்கிழமை எவன் ஒருவன் ஸ்னானம் செய்கிறானோ அவன் விசேஷமான பாக்யத்தை அடைகிறான். எந்த அரசனானவன் ஐப்பசி மாதம் பூர்வபக்ஷம் நவமியில் ஸ்னானம் செய்கிறானோ அவன் விசேஷமான ஜெயத்தை அடைகிறான்.

வாரீர் பிராமணோத்தமரே! இந்த தீர்த்தத்தில் தானமாகச் செய்யவேண்டியவை நவரத்தினங்கள். நீல வஸ்திரம், பசு, மணி முத்துக்கள் இதுகள் தானஞ்செய்கிறது விசேஷமாகச் சொல்லப்படுகிறது. அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யப்

போகும்போது அந்த தீர்த்த ரக்ஷகரான விஷ்வக்சேநரையும் அந்த தீர்த்தத்துக்கு ரிஷியாகிய பிரம்மாவையும் க்ஷேத்திர ரிஷியாகிய மேதாவியையும் நமஸ்காரம் செய்து லட்சிமியையும் ஸ்ரீநிவாசேசனான வாசுதேவனையும் மனதில் தியானம் செய்துகொண்டு முதலில் ஆசமனம் பண்ணி, ஸ்நாநஞ்செய்து இந்த மந்திரத்தை உச்சாரணம் செய்யககடவன். அதாவது வாசுதேவ ஸ்ரீயக்காந்த சங்கசக்கிரதர, அச்சுத, தீர்த்தராஜாதியினுடைய ஆக்ஞையால் எனக்கு ஸ்நாநஞ்செய்ய அநுக்ஞைகொடும் யென்று சொல்லி ஸ்நாநஞ்செய்து துவாதசாக்ஷர வித்தையாகிய வாசுதேவ மந்திரத்தாலும் தாரம் அனுதாரம்யென்கிற மந்திர ரத்நமாகிய துவயத்தாலும் பத்மசம்பவையான லட்சுமியையும் ரக்ஷகரான விஷ்வக்சேனரையும் பிரம்மாவையும் தபோநிதியான மேதாவியையும் தர்ப்பணஞ்செய்து எப்படி கல்பத்தில் சொல்லியிருக்கிறதோ அப்படி தானஞ்செய்யவேணும். மணிமுத்தாநதி தீரத்தில் பிரும்மணனை யாதொருவன் போஜனம் செய்து வைக்கிறானோ அவனுடைய புண்ய பலத்தை அநேக வருஷங்களாலும் சொல்லுகிறதற்கு நான் சமர்த்தனன்று. மணிமுத்தாநதி தீரத்தில் யாதொருவன் சாளக்கிராம தானஞ்செய்கிறானோ அந்த தர்மாத்துமாவானவன் சதா வைகுண்டத்தில் ஆனந்தத்தை யடைகிறான். கோதானம் வஸ்திரதானம் பாயஸதானம் க்ருஸ்ஸரதானம் இதுகளை பிராம்மணாளின் பொருட்டு தானஞ்செய்கிறானோ அவனுடைய புண்ணிய பலன் அநந்தமாய்ச் சொல்லப்படுறது. யாதொருவன் குடும்பியான பிராமணனுக்கு ஜலதானம் தயிர்தானம் இதுகளைச் செய்கிறானோ அவன் வைகுண்டத்தில் மிகவுஞ் சந்தோஷிக்கிறான். இந்த விதியினால் நரனானவன் அந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்கிறானோ அவன் அநேககோடி ஜன்மங்களால்ச் செய்த பாதகங்களில் நின்று விடுபடுகிறான். சூரியன் தனுராசியை யடைந்தபோது அந்த மார்கழி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியில் அந்த தீர்த்தவரத்தில் ஸ்நாநஞ்செய்து உபவாசமிருந்து பகவத்கீதை பதினெட்டு அத்தியாயத்தையும் படித்தும் திருத்துவாதசாக்ஷரத்தை ஜபித்தும் இரவில் தேவதேவனான அந்த ஸ்ரீநிவாஸன் சந்நதியில் ஜாகரணஞ்செய்து இலக்குமியோடு அந்த வாசுதேவனை விசேஷமாய் ஆராதித்து ஓய் துஜசத்தமரே! அப்பால் துவாதசியினருணோதயத்தில் அந்த விமலமான தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து விதி பிசகாமல்

கிரமமாக தேவதைகளை தர்ப்பணஞ்செய்து தேவதேவேசனுன அந்த நம்பியென்கிற பகவானை துவாதசாக்ஷரத்தாலாராதித்து வேதசம்பந்நாளாய் விசேஷமாக விஷ்ணு பக்தாளாயிருக்கி றபிராமணுளை தன் சக்திக்குத்தக்கபடி போஜனம் செய்துவைத்து அவாளுக்கு தக்ஷிணை கொடுத்து இவ்விதமாய் எந்த மர்த்தியன் ஓருஏகாதசி விரதஞ் செய்கிருனே வாரீர் பிர்ம்மநிட்டரே! அவன் கையில் முத்திசாம்ராஜ்ஜியம் சித்தமாய் வந்து விடுகிறது. அகில சம்பத்துக்களும் வருகிறதுகளென்கிற விஷயத்தில் கேட்கவேண்டிதென்ன. முந்தியொரு காலத்தில் ஜம்பூதுவீபத்திலிருக்கிற கங்கை, யமுநாநதி, கோதாவரீ, பயோஷ்ணீ, பிரதாபி, சந்திரபாகை, கோமதீ, ரேவை என்கிற நர்மதை, புண்ணியையான ரூமணவதி, மகாநதியான துங்கபத்திரை, காவிரி, கிருஷ்ணவேணி மலத்தை போக்குவதான தாம்பரபரணி இது முதலான இன்னுமநேக நதிகளென்ன, புட்கர தீர்த்தமென்ன, குருக்ஷேத்திரத்திலுண்டான சக்கரதீர்த்தம், உத்தமமான கூர்மதீர்த்தமென்ன, குசத்தீவிலுண்டான தீர்த்தமென்ன, சர்வ பாபத்தையும் நாசம் பண்ணுவதான சாளக்கிராம தீர்த்தமென்ன, இன்னமூன்று லோகத்திலுமுள்ள பிர்ம்ம தீர்த்தங்கள், விஷ்ணு சம்பந்தியான தீர்த்தங்கள், சோமன் சூரியன் சுராள் சித்தாள் மகாத்துமாக்களான முநிகள் இவர்களுடைய யாதொரு தீர்த்தங்களென்ன, அந்த தீர்த்தங்களெல்லாம் பரமேட்டியாயும் லோகேசனுயுமிருக்கிற பிர்ம்மாவைக்கிட்டி பிரணாமம் பண்ணி, வாரீர் தேவதேவசரான சர்வலோக பிதாமரே! லோகத்திலுள்ள சர்வ ஜனங்களும் தங்கள் பாபத்தைப்போக்கிக்கொள்ளுகிற நிமித்தம் எங்கள் தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து தங்கள் பாபங்களை எங்களிடமாக விட்டு விடுகிருர்களோ அந்த எங்களிடத்தில் தங்கிய பாபங்கள் எந்த உபாயத்தால் நாசத்தை அடையும். எங்களுக்கு பரமமான கதியாயிருக்கிற நீர் அந்த உபாயத்தைச் சொல்லவேணுமென்று அந்நதிகளால் கேழ்க்கப்பட்ட பகவானுன அந்த பிர்ம்மாவானவர் அந்த பத்மபூவானவர் அந்த தீர்த்தங்களைப்பார்த்துச்சொன்னுர்.

பிரும்மாவின் வாக்கியம்.

வாருங்கோள்! கங்கைமுதலிய தீர்த்தங்களே! மார்கழி மாதம் சுக்கலபக்ஷம் துவாதசி திதியான அந்த ஒருதிதியில் மணிமுத்தா

நதியில் ஸ்ரீநிவாசக்ஷேத்திரத்தில் நிர்மலமானவும், ஸமஸ்ததோஷங்களையும் போக்கடிக்கவும் வல்லதும், தீர்த்தங்களுக்குள் மேலானதாயும், ஸ்ரீநிவாஸக்ஷேத்திரத்தில் உண்டானதுமான மணிமுத்தா நதியிலே ஒருதினமாவது வஸித்தால் உங்களுடைய பாபங்கள் போய்விடும்.

பிருகுவின் வாக்கியம்.

இந்தமாதிரியாக அந்த பத்மபூவான பிர்மாவானவர் சர்வ தீர்த்தங்களுக்குள்ளே சிலாக்கியமானது அது என்று சொல்லிவிட்டார். எந்த நரன் மேலே சொல்லப்பட்ட திதியிலே அந்த சிரேஷ்டமான தீர்த்தத்தில் நீராடுகிருனே அவன் சர்வதீர்த்தங்களில் செய்த ஸ்னானபலனை அடைவதுடன் புக்தி முக்தியையும் அடைகிருன்.

பிருமாண்ட புராணத்தில் பிருகுசௌனக சம்வாதத்தில் ஸ்ரீநிவாஸ மாகாத்மியத்தில், 10-வது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம:

(இந்த பதினோராவது அத்தியாயத்தால் இந்த க்ஷேத்திரத்தின் கீழ்த்திசையில் இருக்கிற அநிருத்த தீர்த்த மகாத்மியத்தையும் தெற்கில் உள்ள ப்ரத்யும்ன தீர்த்த மகாத்மியத்தையும இந்திர சாப விமோசனத்தையும் குருசிஷ்ய லக்ஷணத்தையும் ப்ரும்மராக்ஷஸ விமோசனத்தையும் சொல்லுகிறது.)

பிருகுவின் வாக்கியம்.

அந்தப்பரம பாவனமான ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தின் கீழ் பாகத்தில் ஸர்வ பாபங்களையும் போக்கவல்ல அனிருத்த தீர்த்தம் என்கிற தீர்த்தம் இருக்கிறது. வாரீர் துவிஜோத்தமரே! முன்னொரு காலத்தில் துர்வாஸ மகரிஷியின் சாபத்தால் இந்திரனானவன் தன் ஐசுவரியத்தை எல்லாம் இழந்து பிரும்மாவினுடைய ஆக்ஞைப்படி அந்த தீர்த்தத்தில் ஸ்ரீலக்ஷ்மிநாராயணனுகிற ஹிருஷிகேசனை மனதில் தியானித்துக்கொண்டு பதினுயிரம் வருஷகாலம்

ஒருவரும் செய்யமுடியாத தவத்தைச்செய்தான். அந்த தீர்த்த கரையில் மகாகோரமான தவத்தைச் செய்துவிட்டு புரந்தரனென வன் மூவுலகத்திலுள்ள ஸம்பத்தையும் ஸ்ரீநிவாஸதேவனுடைய அனுக்கிரஹத்தினல் அடைந்தான். அந்த தீர்த்தக்கரையில் நல்ல நிழலுடையதும் மகாவிருக்ஷமுமான ஓர் அசுவத்த விருக்ஷம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த விருக்ஷத்தினடியில் செய்யப்பட்ட தானமானது ஸகல கல்மஷங்களைப்போக்கடிக்க வல்லதாயும் லக்ஷ்மீகடாக்ஷத்தைச் செய்யவல்லதாயும் இருக்கிறது. அந்த தீர்த்தத்திற்கு ரிஷியானவர் வஸிஷ்டர், தேவதை இந்திரன், அனிருத்தர் ஹரி, கருடன் தீர்த்த ரக்ஷகர். அடியிற்கண்டவை ஷ தீர்த்தக்கரையில் தானமாகக் கொடுக்கக்கூடியவை. பூமி, குதிரை, தனம், சத்ரம், பானகம், படுக்கை, நல்லபரிமளமுள்ள புஷ்பங்கள், அருசுவையுடன் கலந்த அன்னம் பக்ஷணங்களோடு கூடியவை. இவைகள் வேதவித்துக்களான பிராம்மணர்களுக்கு தக்ஷிணையுடன் கூடக்கொடுக்கவேண்டியது. வாரீர் பிராமணோத் தமரே! இந்தத் தீர்த்தக்கரையில் செய்யக்கூடிய தானங்களுக்குள் ளும் கோதானமும் பூதானமும் விசேஷமாகப் புகழப்பட்டிருக்கி றது. அந்தத்தீர்த்தக்கரையில் ஸமஸ்த பாப பயங்கள் தீரும் பொருட்டு ஸ்னானம் செய்தால் மனதின் சுத்தியும் காந்தியும் ஐசு வரியத்தையும் நரனானவன் அடைகிறான்.

சுக்கிரவாரம் பஞ்சமிதிதியில் ஷ தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தால் மாதாபிதாக்கள் செய்த பாபங்களிலிருந்தும் விடுபடு கிறான். சம்பத்தையும் அடைகிறான். எந்த நரனுவன் அமா வாஸை தினத்தில் ஷ தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து, அங்கு தேவதேவனுடைய ஸன்னதியில் இருக்கிற அசுவத்தவிருக்ஷ மூலத்தில் தீர்த்தம் பூரித்தகடத்தையும் பிராமணனுக்கு எவன் தானம் கொடுக்கிறானோ, ஹே முனே! அவனுடைய பித்ருக்கள் அதிகமான திருப்தியை அடைகிறார்கள். சூத்திரான்னத்தை புசித்தவனும், சமையல் செய்யக்கூடாதவன் செய்த சமையலைப் புசித்தவனும், உண்ணக்கூடாதவற்றை உண்டவனும் அந்த தீர்த் தத்தில் நீராடினமாத்திரத்தில் சுத்தியை அடைகிறான். சூரிய உதயம் முதல் எவன் தன்னுடைய ஆத்மபோஷணையின்பொருட்டு பிச்சையெடுத்து வருகிறானோ அவனும் அந்த தீர்த்தத்தில்

ஸ்னனம் செய்த மாத்திரத்தில் சுத்தியை அடைகிறான். முதலில் அனிருத்தரையும், ஸ்ரீயோடுகூடிய ஜகத்பதியையும், வஸிஷ்டரையும் இந்திரனையும், கருடனையும், நமஸ்கரித்து அவர்களுடைய அனுக்ஞையினால் ஸ்னனம் செய்து, நன்றாகத்தர்ப்பணம் செய்து யதோசிதமான தானத்தை விதிப்படி எவன் செய்கிறானோ அவன் ஸுராபாணம் செய்த பாபங்களிலிருந்தும் தரித்திலிருந்தும் விடுபடுகிறான் வாரீர் பிராமணோத்தமரே!

அந்த க்ஷேத்திரத்தின் தெற்கு பாரிசத்தில் மூன்று லோகத்திலேயும் பிரசித்தபெற்ற ப்ரத்யும்ன தீர்த்தம் என்கிற ஒரு மகா தீர்த்தம் இருக்கிறது. அந்த தீர்த்தக்கரையில் பகவானுன வாயு பகவான் மகத்தான தவத்தைச்செய்தருளினர். வாரீர் ப்ரும்மன்னு! ஆயிரம் வருஷம் கோரமானவும் அனுஷ்டிக்க முடியாததுமான தவத்தைச்செய்தார். அங்கே அந்த வாயு பகவான் தன் கையாலேயே ஒரு மகாபெரிய ஆலமரத்தை ஸ்தாபித்தார். நியாயப்படி வளர்க்கப்பட்டு அவரால் அதிமனோகரமாக கொண்டாடப்பட்டது. அந்த விருக்ஷத்தை தெரிசித்தமாத்திரத்தில் நரக வேதனையை அடைகிறானில்லை. அந்த விருக்ஷத்தைத் தொட்ட மாத்திரத்தில் அக்கொணமென்று சொல்லப்பட்ட இருள் நீங்கி ஞானத்தைப்பெறுகிறான். வாரீர் முனிசார்தூலரே! அந்த விருக்ஷத்தின் அடியில் செய்யப்படும் தானமோ, ஜபமோ, ஹோமமோ, தியானமோ இவைகளினால் மகத்தான கோடிகுணங்களும் உண்டாகின்றன. அதற்கு ரிஷி விசுவாமித்திரர், தேவதை வாயு பகவான்; ப்ரத்யும்னர் ஹரி; ரக்ஷகர் அனந்தன்.

அந்த தீர்த்தக்கரையில் கொடுக்கக்கூடிய பொருள்கள் கன்னிகை, கனகம், புதிய வஸ்திரம், வ்ருஷபம், தாஸி, எள்ளு, ஜலம் முதலியவைகள். இவைகளிலும் விசேஷமாக தத்வ தர்சிகளான முனிகள் அந்த தீர்த்தக்கரையில் கன்யாதானத்தை கருதுகிறார்கள்.

வாரீர் விப்ரசிரேஷ்டரே! காமத்தினால் மோகமடைந்து எவனொருவன் பரஸ்திரி (பிறருடைய மனைவி) யினிடத்தில் சேருகிறானோ அவன் ஷெ தீர்த்தத்தில் ஸ்னனம் செய்தானுகில் சுத்தியை அடைகிறான். குரு பத்தினி, ராஜ பத்தினி, நண்பன்

மனைவி, இவர்களை எந்த மகாபாபி சேருகிருனே அவனும் அத் தீர்த்தஸ்னானமாத்திரத்தால் சுத்தியை அடைகிருன். தன் ஸகோதரன் பார்யை, நாட்டுப்பெண் முதலியவர்களிடத்தில் காமமோகிதனாக சேருகிருனே அந்த மூடாத்மாவும் க்ஷீ தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தமாத்திரத்தில் சுத்தியை அடைகிருன். வாரீர் துவிஜரே!

ஸோமவாரமும் அமாவாஸையும்கூடிய தினத்தில் எவனொருவன் க்ஷீ தீர்த்தத்தில் ஸ்னானம் செய்கிருனே அவன் நாலுகோடி ஜன்மங்களில் செய்த பாபத்தில் நின்றும் விடுபடுகிருன். சுக்கில பக்ஷம், கேட்டை, மூலம் இந்த தினங்களில் க்ஷீ தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தவனாய்க்கொண்டு எந்த மனுஷ்யன் பிதுருக்களுக்குப்பிண்ட தானமும் செய்கிருனே அவன்தான் மேதாவி. பிராமணர்களுக்குப் போஜனம் செய்வித்து அவர்களுக்கு தக்ஷிணையும் கொடுத்தால் நூறு வருஷம் வரையில் அவனுடை பிதுருக்கள் திருப்தியை அடைகிருர்கள். முதலில் ப்ரத்யும்னனாகிற தேவனையும், லக்ஷ்மியையும், முனிசிரேஷ்டரான விசுவாமித்திரரையும், தேவதையான வாயுதேவனையும், அந்த தீர்த்தத்திற்கு ரக்ஷகனான புஜகாதிபனாகிற சேஷனையும் இவர்கள் எல்லாருடைய அனுமதியும் பெற்று அந்த தீர்த்தத்தில் விதிப்படி ஸ்னானம் செய்யவேண்டும். அதில் ஸ்னானம் செய்த பிறகு, தேவர்களுக்கு தர்ப்பணமும் செய்து தானத்தையும் விதிப்படி செய்தாலும் ஸர்வ பாபங்களில் இருந்தும் விடுபடுகிறதுடன் அகம்ஸாகமனமான கோடி பாபமும் நசித்து விடுகின்றன.

வாரீர் ப்ரும்மன்னு! முன்னொரு காலத்தில் மாஹிஷ்மதி என்கிற பட்டணத்தில் பானுதத்தன் என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் வேதங்களை உணர்ந்த உத்தமன் என்று புகழ் வாய்ந்தவன். அவன் ஒரு சமயம் அகங்காரத்தினலே தன் குருவை ஹூங்காரம் செய்தான். குருவினல் சபிக்கப்பட்டவனாய்க்கொண்டு ராக்ஷஸியின் சரீரத்தை அடைந்தான்.

சௌனகர் வாக்கியம்.

வாரீர் பிரும்மன்னு! யார் யார் குருக்கள் என்று சொல்லப்

படுகிறது ! அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாக ஆகிறார்கள்? சிஷ்யர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? என்கிற எல்லா விஷயங்களையும் எனக்குச்சொல்லியருளல் வேண்டும்.

பிருகுவின் வாக்கியம்.

மாதா பிதாக்கள், மாமன், மாமனார் பிரும்மக் ஞானத்தை உபதேசிப்பவன் இவர்கள் குருக்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இங்கு பிரும்மஞானத்தை உபதேசித்தவனும் பிதா மாதக்கள் ஆகிய மூவர்களும் குருக்களாக ஆகிறார்கள். ஆனால் அவர்களினும் மிக முக்கியமான ஒருவர் பிரும்ம ஞானத்தை உபதேசிக்கிறவர்தான். குருவானவர் தத்வத்தை அறிந்தவராகவும், வேதங்களைக்கரைகண்டவராகவும், ரொம்ப கேள்வியுடையவராகவும், திருகாலத்தையும் அறிந்தவராயும் நல்ல குலத்தில் பிறந்தவராயும், ஸ்திரபுத்தியுடையவராயும், எப்போதும் பிரீதியுடையவராயும், ஸர்வபிராணிகளிடத்திலும் ஹிதத்தை செய்யும் விஷயத்தில் ஆசையுடையவராயும், ஆஸ்திகராயும், பகவத்பக்தியுடையவராயும், காமம் குரோதம் இவைகளிலிருந்து விடுபட்டவராயும், மந்திரத்தையும், மந்திரதத்வத்தையும் அறிந்தவராயும். மந்திரத்தை எப்போதும் பாராயணம் செய்பவராயும், பிரும்மத்தை அறிந்தவராயும், பிரும்ம நிஷ்டராயும், பிரும்ம ஞானத்தில் விசக்ஷணராயும், இவ்வாறெல்லாம் இருப்பவராக சர்வசாஸ்திரங்களிலும் அறியத்தகுந்தவராவார்.

சிஷ்யனும் அகங்காரமில்லாதவனாயும், குரு பக்தனாகவும், மாத்ஸரியமில்லாதவராயும், ஆஸ்திகனாகவும், விஷ்ணு பக்தனாகவும் விஷயாதிகளிலிருந்து விடுபட்ட ஆசையுடையவனாயும், ஸத்யவாதியாகவும், தயையுடையவனாயும், ஸ்ரீமானாகவும், காமாதிகளைவிட்டு அகன்றவனாயும், இந்திரியத்தை ஜையித்தவனாயும், அஸூயை இல்லாதவனாயும், செய்யத்தக்கது செய்யத்தகாத இவைகளை அறிந்தவனாயும், குருவின் பூஜா விஷயத்தில் செய்கையாலும் மனஸினாலும் வார்த்தையினாலும் சந்தோஷம் உடையவனாயும், குருவிற்கு பிரதிகூலங்களாக இருப்பவைகளை செய்யவும், பேசவும் ஸ்மரிக்கவும் கூடாதவனாயும், அவருடன் விவாதிப்பதும் சூதாட்டமும் இல்லாதவனாயும், அவரிடம் பொய் சொல்லாதவனாயும், அவ

ருடைய நிழலைக்கூட தாண்டாதவனும், ஒருக்கால் குரு (சிஷ்ய னுக்கு) பிரதிகூலமாக இருந்தாலும் சிஷ்யன் அதை நினைக்கக் கூடாதவனும் இருக்கவேண்டும்.

உறத்த குரலால் சிரிப்பதை விடவேண்டும். சிஷ்யனானவன் குருவினுடைய வார்த்தை அப்பிரியமாக இருந்தாலும் அதைப் பற்றிப்பேசக்கூடாது. செய்யத்தகுந்ததோ தகாததோ குருவுக் குப்பிரியமானதாக இருந்தால் அதை செய்யவேண்டும். நித்திய மும் குருவின் பாதத்தையே சிரஸினால் வணங்கவேண்டும். குரு பக்தியில் பராயணனாக இருக்கும் ஒரு சிஷ்யன் அந்நியகுருவின் பாதங்களைத் தொடவேகூடாது. தன் குருவினுடைய உச்சிஷ் டத்தை ஆத்மசுத்தியின் பொருட்டு ஒரு சிஷ்யனானவன் உண்ண வேண்டும். ஒருபோதும் வேறு குருவினுடைய உச்சிஷ்டத்தை உண்ணவே கூடாது. மகாத்மாக்களான முற்காலத்து ரிஷிகளால் இம்மாதிரியான லக்ஷணங்களையும் ஆசாரத்தை உடையவனாகவும் ஒரு சிஷ்யன் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இவ் விதமாக குரு சிஷ்யலக்ஷணமானது உமக்கே என்னால் சொல்லப் பட்டது.

வாரீர் பிராமணரே! மறுபடியும் இந்த ராக்ஷஸ சரீரத்தை அடைந்தவன் ஆச்சரியமான விருத்தாந்தத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள். பிரம்மராக்ஷஸ ஸ்வரூபத்ஸத குருத்துரோகத்தினால் அடைந்து காட்டில் ஜந்துக்களை பக்ஷித்துக்கொண்டும் வாயுவை பக்ஷித்துக்கொண்டும் பசிதாகத்தினால் மிகவும் சிரமப்பட்டவனாய்க் கொண்டு திவ்வியமான பல தேசங்களை அடைந்தான்.

வாரீர் முனிசிரேஷ்டரே! அனுத்தமமான பிரத்யும்ன தீர்த் தத்தை அடைந்து, அந்த பிரும்மராக்ஷஸன் ஜலபானம் செய்ய ஆசைகொண்டு அந்த நிர்மலமான ஸ்படிகம்போன்ற ஜலத்தைத் தன் இருகைகளாலும் கிரகித்துக்கொண்டான். அந்த ஜலம் பட்டமாத்திரத்தினால் அந்த பிரும்மராக்ஷஸ சரீரம் நாசமடைந்து முன்போல் பிராமணனாக ஆனான். அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விதிப்படி அனுஷ்டித்து, ஸகல கல்மஷங்களும் விலகினவ னாய்க்கொண்டு பாநுதத்தனானவன் த்ருடமான வ்ருதங்களைச் செய்து கடுமையான தபஸ்ஸைச்செய்தான். வெகு சீக்கிரத்தில்

அவன் நிர்மலமான ஞானத்தை அடைந்து, ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுடைய அனுக்கிரஹ விசேஷத்தினுல் மேலான பதவியை அடைந்தான்,

ஆகவே, முனிஸத்தமரே! அந்த தீர்த்தத்தில் ஸ்னனம் செய்கிற மனுஷ்யர்களுடைய ப்ரும்மரக்ஷா முகமான தோஷங்கள் எல்லாம் நாசத்தை அடைகின்றன.

இதி ப்ரும்மாண்ட புராணத்தில் உத்தர பாகத்தில் ப்ருகு சௌனக ஸம்வாதத்தில் ஸ்ரீநிவாஸ மாகாத்மியத்தில் 11-வது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம.

(இந்த 12-வது அத்தியாயத்தால் இந்த க்ஷேத்திரத்தின் மேற்கில் உள்ள ஸாம்பதீர்த்த மகிமையும், வடபால் உள்ள ஸங்கர்ஷண தீர்த்த மகிமையும், சங்கரன் சாபவிமோசனம் அடைந்து, சித்தீசர் என்ற பெயர் பெற்றதும், திருநறையூர் என்ற பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கு கிடைத்ததும், பஞ்ச தீர்த்த மகிமையும் சொல்லப்படுகிறது).

வாரீர் துவிஜோத்தமரே! அந்த ஸ்ரீநிவாஸம் என்கிற க்ஷேத்திரத்தின் மேற்கு திசையில் ஸாம்ப தீர்த்தமென்கிற சமஸ்த தோஷங்களையும் நிவாரணம் செய்யக்கூடிய மகா தீர்த்தம் இருக்கிறது. முன்காலத்தில் ஸப்தரிஷிகள் அந்த தீர்த்தக்கரையில் மகாகோரமானவும் செய்யமுடியாததுமான தபஸ்ஸுக்களைச் செய்து மேலான பதம் பெற்றனர். அந்த முனிஸத்தமர்களாலே அந்த இடத்தில் நெல்லி விருக்ஷங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. முன்பு அந்த பழங்களோடுகூடிய விருக்ஷங்கள் வளர்க்கவும் பட்டன. அந்த மகாவிருக்ஷங்களை தெரிசித்து மூன்று தடவை பிண்டம் போடவேண்டியது. அந்த விருக்ஷத்தைத் தொட்டமாத்திரத்தில் நரனுனவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுகிறுன். இதில் சந்தேகமில்லை. அந்த தீர்த்தத்திற்கு ரிஷியானவர் பராசரர். சூரியன் தேவதை, ஸாம்பன், ஹரி, சுப்ரமண்யன் ரக்ஷகர்.

அடியிற் காணப்படும் பொருள்கள் அந்தப்பரமபாவனமான தீர்த்தக்கரையில் தானமாகக் கொடுக்கத்தகுந்தது.

அவையாவன :— கபிலை, வெள்ளி, பால், தயிர், தேன், ரம்மியமாயும் மதுரமாயும் இருக்கிற பழங்களும் கொடுக்கத் தகுந்தவை.

இந்த தானங்களுக்குள் சிறந்ததும் பிரும்மவாதிகளான முனிகளால் சிலாக்கியமாகக் கருதப்படுவது கபில தானம். இது ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கிற தேவதேவனுக்கு பிரீதியின் பொருட்டாகும்.

சொத்தை அபகரிப்பானேயானால் அவனும் இந்த தீர்த்தத்தில் ஏழுதினம் ஸ்நானஞ்செய்வானாகில் அந்த பாபத்தில் நின்றும் விடுபடுகிறான். எந்த பாபாத்துமாவானவன் ராஜத்திரவியம் குருத்திரவியம் ஒருவனால் நம்பிக்கையின்பேரில் அடைக்கலமென்று வைத்த திரவியம் இன்னமன்னியனுடைய திரவியம் இதுகளையபஹரிப்பானேனால் அந்த புருஷாதமனும் இந்த தீர்த்தத்தில் மூன்று தினம் ஸ்நானஞ்செய்து சுத்தியடைந்து விடுகிறான், வேதத்தை விக்கிரயஞ்செய்து எவன் ஜீவிக்கிறானோ தர்மத்தை விக்கிரயஞ் செய்பவன் சர்வ இடங்களிலும் ப்ரதிக்கிரகம் பண்ணுகிறவன் இவனெல்லாம் அந்த தீர்த்த ஸ்நானத்தால் சுத்தியடைந்து விடுகிறான். வைகாசி-மீ சுக்கிலபக்ஷம் பூர்ணிமா திதியில் அத்தீர்த்தத்தில் யாதொருவன் ஸ்நானம் செய்கிறானோ அவன் பிர்ம்ம லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். யாதொருவன் கார்த்திகை-மீ சங்கராம தினத்தில் அத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்கிறானோ அவன் லக்ஷம் வருஷம் பிர்ம்ம லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். நரனானவன் ஆதியில் ஸ்ரீயோடுகூடிய அந்த சாம்ப ஹரியையும் பராசரரிஷியையும் அந்த தீர்த்த தேவதையான சூரியனேயும் தீர்த்த ரக்ஷகரான சுப்பிரமணியரையுமே சேவித்து அவர்களாலனுக்ஞை கொடுக்கப்பட்டவனாய் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தேவதர்ப்பணம் பண்ணி பிராமணாளின் பொருட்டு அந்த தீர்த்தத்தில் எந்த தானம் பண்ணச்சொல்லி இருக்கிறதோ அந்த தானத்தை ஹரியின் பிரீதியின் பொருட்டு கொடுப்பானேயாகில் அவன் சுவர்ணஸ்தேயாதி பாபங்களில் நின்றும் விடுபடுகிறான். இதில் எவ்வளவேனும் சந்தேகம் கிடையாது. அந்த தீர்த்தத்துக்கு வடபாகத்தில லோகங்களையெல்லாம் பாவனஞ் செய்கிறதாய் அதி

பரிசுத்தமான சங்கருஷண தீர்த்தமென்று இருக்கிறது. முந்தி யொரு கற்பத்தில் சர்வலோக மகேசுவரரான சம்புவானவர் பிர்ம் மாவின் சிரசையறுத்து அதனல் பிர்ம்மஹத்தி தோஷம் வந்து அந்த பிர்ம்ம கபாலத்தைக்கையிலேந்திக்கொண்டு பிச்சையெடுத் துக்கொண்டு மூன்று லோகத்தையும் சுற்றியும் போகாத பிர்ம்ம ஹத்தியானது இந்த க்ஷேத்திரத்தில் வாசுதேவனுடைய பிரசா தத்தால் பிர்ம்மஹத்திபோய் பிச்சையெடுப்பதையும் விட்டு மகா மதியான அந்த சங்கரரானவர் பிர்மஹத்தியால் நேரிட்ட தாபத்தை போக்கிக்கொள்ளும் நிமித்தமாக அந்த பிரபுவானவர் இந்த சங்கருஷ்ண தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து பக்கத்தில் புத் தியை வைக்காமல் தன் ஹிருதயகமலத்தில் ஜகன்னுதரான நாரா யணனை தியானித்துக்கொண்டு மந்திர ராஜமென்று பிரசித்தமான அஷ்டாக்ஷர மகாமந்திரத்தை வாயால் ஜபித்துக்கொண்டு மயிர்க் கூச்செரியும்படி மகாகோரமான தபசை பண்ணி அந்த தீர்த்தக் கரையில் சித்தியடைந்தபடியால் மகாத்துமாவான அந்த சங்கா ருக்கு சித்தீசரென்று பேர் கிடைத்தது. இந்த க்ஷேத்திரத்தில் அட்டாக்கரத்தை அந்த மந்திரம் எத்தனை யெழுத்திருக்கிறதோ அவ்வளவு உரு ஜபிக்குமவர்களுக்கு உடனே சித்தியுண்டாகிவிடு கிறது. இந்த விஷயம் மிகவும் இரகசியமானது. சந்தேகமில்லை. மகாத்துமாவான சங்கரராலே அந்த சங்கருஷணதீர்த்தக்கரையில் மகத்தான மாமரமானதொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்தமரமான பலங்கன் துளிர்கள் புட்பங்கள் இதுகளால்சோபித மாயிருக்கிறது. அந்த மரத்தை யாதொருவன் கண்ணுரப்பார்க் கிருனே கையாற்றொடுகிருனே அவன் சர்வ பாபங்களில் நின்றும் விடுபடுகிறுன். மலடியாயிருப்பவர்கள் அந்த விருக்ஷத்தை ஆலிங் கனம் பண்ணிக்கொண்டால் உத்தமனுன புத்திரனை சீக்கிரத்தில் அடைகிருள். ஓய் முநியே! அந்த தீர்த்தத்து ரிஷி நான்முன். தேவதையானவர் சுவயம் சங்கரர் அந்த தீர்த்தத்தில் சங்கருஷண ரென்கிற விஷ்ணு ஸ்ரீதேவியோடு சந்நிதி பண்ணுகிருர். அந்த தீர்த்தத்துக்கு ரக்ஷகர் கணேசர். அந்த தீர்த்தத்தில் விருஷபம், அன்னம், ஜலம், வஸ்திரம், தாம்பரம், எருமை, எள்ளு இது கள் தானஞ்செய்யவேண்டும். இந்த தானங்களுக்குள்ளே அந்த தீர்த்தத்தில் அன்னதானத்தை விசேஷமாக தத்துவதரிசிகளான ரிஷிகள் பிரசம்சை பண்ணுகிருர்கள். எந்த மானவனுனவன்

கோஹத்தி, வீரஹத்தி, புராணஹத்தி முதலானஹத்தி செய்து பாதகியாகிருனே அவன் மூன்று மாதம் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சுத்தியடைந்து விடுகிருன். இன்னமும் மாதாவை ஹத்தி செய்தவன் பிதாவை ஹத்தி செய்தவன் குருவைக்கொன்றவன் எப்படிப்பட்ட பாதகியும் அதில் மூன்று மாதம் ஸ்நானம் செய்தால் கீழ்கூறிய தோஷத்தில் நின்றும் விடுபடுகிருன். துலா சங்கரமணத்தில் எந்த நரனானவன் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கிருனே அந்த நரனானவன் தேகத்திலுள்ள ரோமங்களின் சங்கையாகிற மூணரைக்கோடி வருஷம் சுவர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிருன். சூரியன் மேடராசியை அடைந்திருக்கும்போது பூர்ணிமாதினத்தில் எந்த மனிதன் அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிருனே அவன் அநேகபாதகங்களில் நின்றும் விடுபடுகிருன். முதலில் லட்சுமியோடுங்கூட சங்கருஷண ஹரியையும் என்னையும் மகாபிரபுவான உருத்திர பகவானையும் தீர்த்த ரக்ஷகரான கணேசரையும் நமஸ்காரம் செய்து இவர்கள் அநுமதிகொண்டு விதிபிசகாமல் வந்த சங்கருஷண தீர்த்தத்தில் எந்த நரனானவன் ஸ்நானஞ் செய்து தேவாதிகளைக் குறித்து தர்ப்பணம் செய்து பிராமணாளின் பொருட்டு எப்படி சொல்லப்பட்டதோ அப்படி தானஞ் செய்கிருனே அவன் பிர்ம்மஹத்தியாதி பாபங்களில் நின்றும் விடுபடுகிருன். இதில் சந்தேகமில்லை. வாரீர் மகாமதியான துஜோத்தமரே! தீர்த்தங்களுக்குள் உத்தம தீர்த்தங்களாயும் அதிபாவனங்களாயும் மஹத்துக்களாயுமிருக்கிற ஐந்து தீர்த்தங்கள் என்னால் உமக்குச்சொல்லப்பட்டது. பஞ்சகிருத்தியகரியாயும் விஷ்ணுவின் சக்தியாயும் அவருடைய தர்மத்தை நடத்துபவளாயுமிருக்கிற ஸ்ரீ தேவியானவள் இந்த ஐந்து தீர்த்தங்களிலும் சுவயம்தானே சன்னிதானத்தை பண்ணிக்கொண்டிருக்கிருள். வித்துவான்கள் இந்தக்ஷேத்திரத்தை ஸ்ரீநிவாஸமென்று சொல்லுகிறபடியால் இந்த க்ஷேத்திரத்தில் மஹாலட்சுமி சுதந்தரையாய் நறையென்கிற தேன்போல அந்த திருவுக்கு ருசித்த ஊராகையால் இந்த சுகந்தபுரத்துக்கு திருநறையூரென்றுஞ் சொல்லுகிருர்கள், இது நிச்சயம். மார்கழி மாதத்தில் சுக்லபட்சம் ஏகாதசியில் யாதொரு நரனானவன் உபவாசமிருந்து துவாதசி அருணேதயத்தில் இந்த தீர்த்தங்கள் ஐந்திலும் ஸ்நானம் செய்கிருனே அவன் அநேக ஜன்மங்களில் செய்த மகாபாதக கோடிகளில் நின்றும்

விடுபட்டு சிறந்த செல்வத்தை அடைந்து முக்தி சாம்ராஜ்ஜியத்தையும் அடைகிறான். ஓய் சௌனகரே! இந்த ஸ்ரீநிவாச மாகாத்துமியமென்னால் வியாச பகவானிடத்தில் இருந்து எப்படி கேழ்க்கப்பட்டதோ அந்தப்படியே உமக்கு நான் விஸ்தாரமாகச்சொல்லிவிட்டேன். நீர் இன்னமென்ன கேழ்க்க விரும்புகிறீர் சொல்லும்.

சௌனகர் வாக்கியம்.

வாரீர் பகவானே! மஹாபிரபுவே என்னால் எது கேழ்க்கப்பட்டதோ அதெல்லாம் உம்மால் சொல்லப்பட்டு விட்டது. உம்முடைய முகத்தில் நின்றும் வெளியேறின இந்த மாகாத்துமியம் முழுமையும் என்னால் பக்தியாய்க்கேழ்க்கப்பட்டது. வேறு எனக்கு கேழ்க்கவேண்டியதொன்றுமில்லை. என்னுடைய சந்தேகங்களாகிற கொடிகளின் வேர்களானதுகளும் உம்மாலறுக்கப்பட்டுவிட்டதுகள். என் மனதும் நிர்மலமாகிவிட்டது. வாரீர் பிருகு பிரசாபதியே! எனது அந்தராத்துமாவானது உம்முடைய அனுக்கிரஹத்தால் திருப்தியை அடைந்துவிட்டது.

பிருகுவின் வாக்கியம்.

என்னால் உமக்கு ஸ்ரீநிவாசக்ஷேத்திர தீர்த்த மாகாத்துமியம் முழுமையும் சொல்லப்பட்டது. இதை கேழ்ப்பவர்களுடைய பாபங்கள் தன்னடையே விட்டுப்போய்விடும். இதில் சந்தேகமில்லை. அசுவமேத யாகத்தின் அவபிருதத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு எந்த பலன் கிடைக்கிறதோ அந்த பலன் இந்த மாகாத்துமியத்தைக் கேட்டமாத்திரத்தில் அடைந்துவிடுகிறார்கள். யாதொரு மர்த்தியனானவன் இந்த மாகாத்துமியத்தை கேழ்க்க இச்சை இல்லாதவனாயிருந்து ஏதோ வழிவசமாய் காதில் விழக்கேட்டபோதிலும் அந்த மனிதனை பாபங்கள் விட்டு சிங்கத்தைக்கண்ட மிருகங்கள் எப்படி நடுங்கி ஓடிப்போய் விடுகிறதுகளோ அப்படி ஓடிப்போய் விடுகிறதுகள்.

எட்டு வருஷகாலம் அக்கினி ஹோத்திரஞ் செய்தவனுக்கு எந்த பலன் கிடைக்கிறதோ அந்தப்பலனை இதைக்கேட்டவன் உடனே அடைகிறான். யாதொருவன் தினந்தோறும் பிராமணனுக்கு ஒரு துலாம் தங்கம் தானம் செய்து எந்த பலனை அடை

கிருனே அந்த பலனை இந்த மாகாத்துமியம் கேட்டமாத்திரத்தில் அடைந்துவிடுகிருன். பிரயாகம் புஷ்கரம் குருக்ஷேத்திரம் இது முதலான க்ஷேத்திரங்களிலே ஓய் துஜோத்தமரே! உபவாசமிருப்பவன்எந்த பலனை அடைகிருனே அந்த பலத்தை இந்த மாகாத்துமியங்கேட்டவுடனே அடைந்து விடுகிருன்! இப்போது வெகுவாய் சொல்லுவதில் என்ன பயன், ஓரே சொல்லாய்ச் சொல்லுகிறேன் கேளும் யாதொருவன் இந்த மாகாத்துமியத்தை காலையிலெழுந்திருந்து ஸ்நானஞ் செய்துவிட்டுசிரத்தையாய் படிக்கிருனே வெகு ஜனங்களை கேழ்க்கச்செய்கிருனே சகல கல்மஷங்களையும் போக்குவதான இந்த மாகாத்துமியத்தை மனதால் ஸ்மரித்து தரிக்கிருனே கேழ்ப்பவர்களுக்கு எழுதிக்கொடுக்கிருனே அவன் இவ்வுலகில் சர்வ காமங்களையும் அடைந்து முடிவில் பிர்ம்மசாயுச்சியத்தையும் அடைகிருன்.

பிர்ம்மாண்ட புராணத்தில் உத்தர பாகத்தில் பிருகு சௌனக சம்வாதத்தில் ஸ்ரீநிவாச மாகாத்துமியத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீநிவாச மாகாத்துமியம் சம்பூர்ணம்.

ஸ்ரீ வஞ்சுளேசாய நம.

ஸ்ரீ முருகன் அச்சகம், 19, ஸ்ரீ கும்பேசுவரர் தெற்குவீதி, கும்பகோணம்



கல் கருடசேவை
4-ம் திருநாள் ஓலைச்சப்பரம்

7B
8-53